தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, புரட்டாசி 30 (15-10-'60). சனிக்கிழமை | இதழ் 18

செய்திப்பாட்டு

அஞ்சாண்டுத் திட்டங்கள் பாருங்கடி--என்ன
அநியாயம் செய்கின்றார் கேளுங்கடி
நெஞ்சார வஞ்சகம் செய்வடக்கை--இன்னும்
நேசிக்கும் அற்பரும் பாருங்கடி !

திட்டங்கள் தீட்டினார் பாருங்கடி !--இந்தத்
தீமையை யாரிடம் சொல்வதடி ?
சட்டங்கள் கையில் இருப்பதனால்--நீதி
சாத்திரந் தன்னையே மீறுவதோ ?

ஓடிய ஆற்றை வழிமறித்து--மிக
ஓங்கும் அணைகளை மேடுறுத்தி
வாடிய பயிர்கள் தழைத்திடவே--நீர்
பாய்ச்சினார் வடக்குச் செழித்திடவே !

கோடிபல் கோடி கடன்வாங்கித்--தொழிற்
கூடங்கள் ஆயிரம் நாட்டுகின்றார்
தேடிநம் மந்திரி சென்றாலோ--ஏதும்
செய்ய முடியாதென் றோட்டுகின்றார்.

வாங்கும் வரிகளோ கொஞ்சமில்லை--இங்கு
வதங்கிநாம் சாவதில் பஞ்சமில்லை.
தேங்கும் பணமேதும் மிஞ்சவில்லை--இதைத்
தில்லியில் எண்ணிட நெஞ்சமில்லை.

போக்கு வரத்து; மிகுந்ததனால்--இருப்புப்
பாதைகள் போட்டிட வேண்டுமென்றால்
சேர்க்க இடமில்லை திட்டத்திலே--வட
தேசத்திலே போட்டுத் தீர்ந்ததென்றார் !

இரும்பு நிலக்கரிச் சுரங்கமெல்லாம்--தெற்கே
இருக்குதென் றாலும் குடைவதற்கே
விரும்புவ தில்லை; வடவருக்கே--சுகம்
வேண்டுமென் றெண்ணினார் கோதையரே !

ஆலைகளும் தொழிற் சாலைகளும்--அங்கே
ஆயிர மாயிரம் ஓடுதடி
வேலையில் லாதவர் எண்ணிக்கையோ--இங்கு
வேளைக்கு வேளையே கூடுதடி.

ஒழுங்காகப் பங்கு கொடுப்பதென்றே--நெஞ்சில்
உண்மையாய் எண்ணுவ தில்லையடி
அழுங்குழந் தைக்குத்தாய் பால்கொடுப்பாள்--இவர்
அதற்குங் கசியாக்கல் நெஞ்சரடி !

—நாகநாதன்.

1962-ஆம் ஆண்டு வரப்போகிற தேர்தலுக்கு இப்போதே கட்சிகள் ஆயத்தம் ஆகின்றன. பெரும்பாலான எதிர்க்கட்சிகள் தி. மு. க. வின் தலைமையை நாடுகின்றன.

மூன்றாவது குழந்தை

மு. கணபதி

ஒருவரையொருவர் காதலித்து, திருமணம் செய்துகொண்ட தம்பதிகள்தான் மணிமேகலையும் மனோகரனும். திருமணமாகி இரண்டாண்டுகளில் கர்ப்பமுற்றாள் மணிமேகலை. பெண் உள்ளம் பெண்குழந்தையை விரும்பியது. ஆண் உள்ளம் ஆண் குழந்தையை விரும்பியது. முடிவில் பெண் உள்ளம்தான் வெற்றி பெற்றது. ஆம்! பெண் குழந்தை பிறந்தது.

அடுத்து இரண்டாண்டுகளில் மீண்டும் கர்ப்பமுற்றாள மணிமேகலை. இம்முறை தம்பதிகள் இருவரும் ஆண்குழந்தையை விரும்பினர். ஆனால் இம்முறையும் பெண் குழந்தைதான் பிறந்தது.

மனோகரனின் உள்ளம் வேதனைப் பட்டாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சமாளித்துக்கொண்டான். இனி குழந்தை வேண்டாமென்றும், கர்பபத்தடை - ஆப்பரேசன் செய்துகொள்ளப் போவதாக மணிமேகலையினிடம் கூறினான். அவள் ஒப்புக்கொள்ளவில்லை மூன்றுவது குழந்தை நிச்சயம் ஆண் குழந்தை பிறக்குமாகையால் ஆப்ரேசன் செய்துக்கொள்ள வேண்டாமென்று அவள் அழுத்தந்திருத்தமாகச் சொன்னாள்.

ஆனால், அதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. இரண்டு பெண் குழந்தைகளை நல்லபடியாகப் படிக்க வைத்து வளர்த்தால் போதுமாகையால் ஆப்பரேசன் செய்துகொள்வதுதான் நல்லது' என்று அவன் எவ்வளவோ நயந்து சொல்லியும் அவள் கேட்கவில்லை.

கடைசியில் மணிமேகலைக்குத் தெரியாமல் கர்ப்பத்தடை-ஆப்பரேசன் செய்துகொள்வது - என்று முடிவு செய்தான். அதன்படி அவனது குடும்ப டாக்டர் அன்புமணி அவர்களிடம் சென்று எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி ஆப்பரேசன் செய்துகொள்ள வேண்டுமென்று கூறினான்.

ஆனால், டாக்டர் அன்புமணி அவர்கள் 'மூன்றுவது குழந்தை பெண்ணாகத்தான் பிறக்குமென்பது என்ன நிச்சயம். ஆணாகப்பிறந்தாலும் பிறக்கலாம். ஆபபரேசன் செய்துகொள்ள வேண்டாமென்று'' மணிமேகலைக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசினாரே தவிர மனோகரனுடைய விருப்பத்துக்கு இணங்கவில்லை.

மனோகரனும் விடுவதாக இல்லை. அவசியம் ஆப்பரேசன் செய்துதான் ஆகவேண்டுமென்று ஒரே பிடிவாதம் பிடித்தான். டாக்டர் அன்புமணி அவர்களுக்கு ஒரே குழப்பமாக இருந்தது மறுநாள் காலையில் வரும்படி மனோகரனை அனுப்பிவைத்தார்.

அன்று இரவு முழுதும் டாக்டர் அன்புமணி தூங்கவில்லை. சிந்தனைப் புயலிலே சிக்கித் தவித்தது அவர் மூளை. கடைசியில் அவர் ஒரு முடிவுக்குவந்தார். விபரீதமான முடிவுதான் இருந்தாலும் என்ன செய்வது. வேறு வழியில்லை!

மறுநாள் மனோகரன் வந்தான். அவனைப் படுக்கச் சொல்லி ஆப்ரேசன் செய்தார் மூன்று நாட்கள் வரை ஓய்வெடுக்கச் சொன்னார். 'மிக்கநன்றி' என்றான் மனோகரன். மகிழ்ச்சியால் அவன் முகம் மலர்ந்திருந்தது. "உன் எண்ணம் வெற்றி பெற்றுவிட்டதல்லவா?" டாக்டர் அன்புமணி அமைதியாக கேட்டார். பதிலுக்கு இலேசாகச் சிரித்தான். மனோகரன்.

★

உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், லேசாக காய்ச்சல் இருப்பதாகவும் மணிமேகலையினிடம் பொய்யைச் சொல்லி ஒரு வாரம்வரை வீட்டில் ஓய்வெடுத்தான் மனோகரன்.

ஒரு வார ஓய்வுக்குப் பிறகு, அவர்களுடைய இல்லறத்தேர் தங்குதடையின்றி உருண்டோடியது. ஒரு வருடத்திற்குப் பிறகு மீண்டும் மணிமேகலை கர்ப்பமுற்றாள்.

மனோகரனின் உள்ளம் எரிமலையாக மாறியது. திகைத்தான் திணறினான். துடித்தான் 'எப்படி கர்ப்பமுற்றாள்? எப்படி கெர்ப்பமுற்றாள்? எப்படிக் கர்ப்பமுற்றாள்?' கேள்வி திரும்ப திரும்ப அவன் மூளையை குழப்பியது.

ஒருவேளை அவன் வாழ்க்கையில் தவறி நடந்திருப்பாளோ? பயங்கரமான எண்ணம்! சூழ்நிலை அவனை அப்படி எண்ணச் செய்தது சந்தேகம் அவன் உள்ளத்தில் குடிகொண்டது. 'நான் ஆப்பரேசன் செய்துகொண்டேன் நீ எப்படி கர்ப்பமுற்றாய்?' மணிமேகலையைக் கேட்க வேண்டுமென்று துடித்தான்; ஆனால் கேட்கவில்லை. கேட்டால் அவளது 'குட்டை' எப்படி கண்டுபிடிப்பது?

மனைவியை வெறுத்தான்; காரணகாரியமில்லாமல் கண்டித்தான்; திட்டினான்; அடித்தான்; உதைத்தான.

கணவனின் இந்த திடீர் மனமாற்றத்தைக் கண்ட மணிமேகலை நிலைகலங்கினாள். இதற்கு என்ன காரணமென்று சிந்தித்தாள. மூன்றுவது பிறக்கவிருக்கும் குழந்தை பெண்ணாகவிருக்கும் என்ற எண்ணத்தின்பேரில்தான். தன் கணவன் தன்னை வெறுத்து வருவதாக முடிவு செய்தாள்.

மூன்றுவது குழந்தை நிச்சயம் ஆண் குழந்தையாகப் பிறக்கும் - என்று நம்பினாள். அப்படி ஆண்குழந்தை பிறந்தால் தன் கணவனின் வெறுப்பு மறைந்துவிடும் - என்று இதயத்தை இரும்பாக்கிக்கொண்டு கடமையில் கண்ணாகவிருந்தாள்.

முன்பெல்லாம் மனோகரன் காலையில் உத்தியோகத்திற்குச் சென்றால் மாலை ஐந்து மணிக்குமேல்தான் வீடு திரும்புவான். ஆனால் இப்பொழுதெல்லாம் அவன் திடீர் திடீரென்று பகல் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் வீட்டிற்கு வர ஆரம்பித்தான். வீட்டிற்கு வந்ததும் கட்டிலுக்கு அடியில், குளிக்கும் அறை... முதலிய இடங்களுக்குச் சென்று ஆராய்வான்.

இரவில் ஏதாவது லேசாக ஓசை கேட்டால் பதறிக்கொண்டு எழுந்து சுற்றுமுற்றும் ஆராய்வான். மனோகரனின் போக்கு மணிமேகலைக்குப் புதிராகவேயிருந்தது. அத்துடன் பயங்கரமாகவுமிருந்தது.

தாங்க முடியாத மனவேதனையோடு தாய்வீட்டிற்குச் சென்றாள், பிரசவத்திற்காக மணிமேகலை சென்று மாதங்கள் சில உருண்டோடின மணிமேகலைக்குக்குழந்தை பிறந்தது. ஆண் ஆம். குழந்தைதான் மணிமேகலை அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே! இல்லை. தொல்லைகளெல்லாம் தீர்ந்துவிட்டது என்று உள்ளம் பூரித்தாள்.

மனோகரனுக்குத் தந்திமூலம் செய்தி அனுப்பப்பட்டது. ஓடோடி வருவான் என்று எதிர்பார்த்த பேதை மணிமேகலை ஏமாற்றத்தைத்தான் தழுவிக் கொண்டாள்.

மாதம் ஒன்றும் அதை தொடர்ந்து மற்றொன்றும் ஓடி மறைந்தது. குழந்தையைப் பார்க்க மனோகரன் வரவே இல்லை மணிமேகலை தன் எதிர்கால பயங்கர வாழ்க்கையை நினைத்தாள். உள்ளம் எரிமலையானது அழுதாள். அழுதுகொண்டே இருந்தாள். அதைத் தவிர அவளால் வேறு என்ன செய்யமுடியும்?

கணவன் வீட்டிற்கு வந்த மணிமேகலை கணவனிடம் குழந்தையைக் கொடுத்தாள். அவன் திரும்பிப் பார்க்காமலே வேலைக்குச் சென்றுவிட்டான்.

மனோகரன் இயந்திர மனிதனாகவும், மணிமேகலை நடைப்பிணமாகவும் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் பல இரவு - பகல்கள் தோன்றி மறைந்தன.

★

அன்று கடற்கரையில் தற்செயலாக டாக்டர் அன்புமணி அவர்களை மனோகரன் சந்தித்தான். "என்ன மனோகரன் உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாமே. நல்லவேளை உங்கள் பேச்சைக் கேட்டு உண்மையிலேயே உங்களுக்கு 'கர்ப்பதடை ஆப்பரேசன்' செய்திருந்தால்... இப்பொழுது ஆண்குழந்தை பிறந்திருக்குமா...?"

"என்ன சொல்லுகிறீர்கள் கர்ப்பத்தடை ஆப்பரேசன்' செய்யவில்லையா புரியவில்லையே."

"நல்ல வேடிக்கை! 'கர்ப்பத்தடை ஆப்பரேசன்' செய்திருந்தால், இப்பொழுது உமக்கு எப்படி ஐயா குழந்தைபிறந்திருக்கமுடியும்? உமது தொந்தரவு பொறுக்கமுடியாமல் 'கர்ப்பத்தடை ஆப்பரேசன்' செய்வது



போல் பாவனை செய்து அடிவயிற்றில் கீறி மருந்து போட்டு அனுப்பினேன். என்னுடைய எண்ணம் வெற்றி பெற்றுவிட்டது. மற்றொரு சமயம் சந்திப்போம்" டாக்டர் அன்புமணி வெற்றிச் சிரிப்புடன் போய்க்கொண்டிருந்தார்.

மனோகரனுக்குத் தலைசுற்றியது. மணல்மீது சாய்ந்தான். கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டுப் பெரும் அலைகள் வந்து அவனைக் கடலுக்குள் இழுத்துச் செல்வது போலிருந்தது. இருதயம் வெடித்து விடும்போலிருந்தது.

சிறிதுநேரத்தில் தன்னைச் சமாளித்துக்கொண்டு வீட்டிற்கு ஓடினான். வீட்டில் மணிமேகலை ஒரு கையில் குழந்தையுடனும், மற்றொரு கையில் ஒரு பெட்டியுடனும் எங்கோ புறப்பட்டுக்கொண்டிருந்தாள்.

"எங்கே போகிறாய் மணிமேகலை?" பதட்டத்துடன் கேட்டான் மனோகரன்.

"தற்கொலை செய்துகொள்ளலாமென்றுதான் புறப்பட்டேன். ஆனால் இந்தக் குழந்தைகளுக்காக நான் வாழ்ந்துதான் ஆகவேண்டுமென்றிருப்பதால் என் பெற்றோர்கள் வீட்டுக்குப் போகிறேன்."

அவள் கையிலிருந்த மூன்றுவது ஆண்குழந்தையை வாங்கி, அதன் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டான்.

மணிமேகலையை ஒரு கையில் அணைத்தவாறு 'நான் மனிதனாகி விட்டேன் மேகலை! என்னை மன்னித்துவிடு' என்றான் மனோகரன். அவன் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

மணிமேகலைக்கு ஒன்றும் புரியவில்லை. புரியாதது புரியாமலே இருக்கட்டும். ★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 15-10-'60 | இதழ் 18

இந்தி வெறியர் சம்மேளனம்

'இந்தி'யர்கள் நாளுக்குநாள் வெறியர்களாக மாறிவருகிறார்கள். தேள் கொட்டிய மனிதனுக்கு விஷக்கடுப்பு கணத்துக்குக் கணம் அதிகமாவது போல், நாட்டிலே இந்தி வெறியர்களின் நச்சு மனப்பான்மையும், தீய செயல்களும் நொடிக்கு நொடி கூடிக் கொண்டு வருகின்றன.

இந்தப் பேயர்களின் வெறிப்போக்கு இப்படி அதிவிரைவாக மேலோங்கி வருவதற்குக் காரணம் இந்தத் துணைக் கண்டத்தின் அரசினர் இவர்களுக்குக் கொடுக்கும் ஆதரவுதான்!

இந்தத் துணைக் கண்டம் முழுவதும் இந்தியை ஆட்சிமொழியாக்குவதை எதிர்க்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக்குவதால் அந்தந்த நாட்டின் மொழிகளின் வாழ்வுக்கும் சிறப்புக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று திரும்பத்திரும்ப துணைக்கண்டத்தின் நாலாபக்கங்களிலும் உள்ள அறிஞர் பெருமக்களும், மக்கள் தலைவர்களும் கூறி வருகிறார்கள். ஆனால், ஆளுகின்றவர்களோ, நிலைமைக்குத் தகுந்தபடியும் இடத்திற்குத் தகுந்தபடியும் ஆளுக்குத் தகுந்த படியும் பேசி எதையும் தட்டிக் கழித்து விடலாமென்ற எண்ணத்தோடு காரியத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆளுபவர்களின் இந்தப் போக்கு நாட்டிலே நிரந்தரமான குழப்பத்தையும் வெறித்தனத்தையும் ஏற்படுத்தத்தான் பயன்படும்.

ஆளவந்தவர்களுக்கு உறுதியான ஒரு கொள்கை வேண்டும். மக்கள் ஆட்சி என்று வாய்கிழியக் கூவுகின்ற ஆட்சியினர் மக்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமே யல்லாமல், இந்தி வெறியர்களின் மனத்திருப்திக்காக வேலை செய்யக் கூடாது.

மணியார்டர் பாரம் முதலியவற்றில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருப்பதே புரியவில்லை என்று சொல்லுகின்ற நேரத்தில், மத்திய அரசினர் இந்தியில் அடிக்கப் போவதாகக் கூறினார்கள். அடித்தும் வெளியிட்டார்கள். திசை தெரியாத காட்டில், வழிகாட்டக் கையில் இருந்த விளக்கையும் அணைத்து விட்டதுபோல் இருக்கிறது அரசினரின் இந்தச் செயல்.

எவ்வளவோ சொல்லி எடுத்துக் காட்டிய பிறகு கடைசியில், மணியார்டர் பாரங்களைத் தமிழ் மொழியில் அச்சடித்துக் கொள்ள சென்னை அஞ்சல் நிலையத்தினருக்கு அனுமதி கிடைத்திருப்பதாக அஞ்சல் நிலையப் பெரிய அதிகாரி கூறியது கேட்டு ஓரளவு மனவருத்தம் குறைந்திருந்த தமிழர்களை விட்டேனா பார் என்று மறுபடியும் வேறொரு வழியாக இந்தியைக் கொண்டு வர முனைந்திருக்கிறார்கள் மத்திய அரசினர்.

புகை வண்டிப் போக்குவரத்து ஆரம்பித்த காலத்திலிருந்து புகைவண்டிக் கட்டணச் சீட்டுகளில் ஊர்ப்பெயர் முதலியன தமிழிலேயே அச்சடிக்கப் பட்டு வந்திருக்கின்றன. இன்று இந்த 'இந்தி'யர் அரசாங்கம் அந்தக் கட்டணச் சீட்டுக்களிலெல்லாம் தமிழை எடுத்துவிட்டு அந்த இடத்தில் இந்தி எழுத்துக்களைப் போட்டு அடிக்கப்போகிறதாம்!

அரசாங்கத்தின் இந்தச் செயலால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளையும் கஷ்டங்களையும் அது புரிந்துகொள்ளவில்லையா? புரிந்துகொண்டிருந்தும் அதிகாரம் இருக்கிறதென்ற ஆணவத்தால் இப்படி நடந்துகொண்டிருக்கிறதா?

ஒருபுறம் இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று வாக்களிப்பதும், இன்னொரு புறம் துறை துறையாகத் திணித்துக்கொண்டு வருவதும் எந்த நியாயத்தைச் சேர்ந்தது என்பதே தெரியவில்லை.

மக்கள் விருப்பத்திற்கு மாறுபாடாக மீண்டும் மீண்டும் இந்த அரசாங்கம் நடந்துகொள்வதற்கு, பின்னணியிலே ஒரு பலமான தூண்டுதல் - அல்லது உறுத்தல் இருந்துகொண்டேயிருக்கிறது. மக்கள் சக்தி பொங்கி எழுவதைக் கண்டு அரசாங்கம் சிறிது மனந் தடுமாறுகின்ற நேரத்தில் எல்லாம், பின்னால் இருந்துகொண்டு, விடாதே! விடாதே! நடத்து! தொடர்ந்து நடத்து அராஜகத்தை! என்று தூண்டிவிட்டுக்கொண்டேயிருக்கிறது, ஒரு கும்பல். இந்தக் கும்பல் இந்தி வெறியர் கும்பல் என்பதில் சிறிதளவும் ஐயப்படுவதற்கில்லை.

இந்தி வெறியர்கள இந்த அக்டோபர் மாதம் 8-ம் நாளன்று ஐதராபாத்தில் ஒரு மாநாடு கூட்டியிருக்கிறார்கள். இந்த மாநாட்டிற்கு அந்த வெறியர்கள் சூட்டியுள்ள பெயர் அகில இந்திய ஆங்கில ஒழிப்புச் சம்மேளனம் என்பதாகும்.

ஆங்கில ஒழிப்புச் சம்மேளனம் என்ற பெயர் வைத்துக்கொண்டு இந்த வெறியர்கள், இந்தியைத் தவிர இந்தத் துணைக்கண்டத்தில் உள்ள அத்தனை மொழிகளையுமே ஒழித்துக் கட்டிவிடத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பயங்கரக் கும்பலின் பின்தூண்டுதல் காரணமாகத்தான் இந்திய அரசு மீண்டும் மீண்டும் மக்கள் மன்றத்திலே வந்து புதிய புதிய சிக்கல்களையும் குழப்பங்களையும் உண்டாக்குகின்றது.

அகில இந்திய ஆங்கில ஒழிப்புச் சம்மேளனம் என்ற பெயரில் மாநாடு கூடிய இந்த இந்தி வெறியர்கள். நல்லவர்கள் இதயம் புண்ணாகும்படியான பல பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை அறியும் பிறமாநிலத்தில் உள்ள தாய்மொழிப் பற்றுடையவர்களும் கொதிப்படையும்படியாக இந்தி வெறியர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆங்கிலம் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு யாரும் ஓட்டளிக்கக் கூடாது என்பது அவர்கள் வெறித் தீர்மானத்திலே யொன்று. மக்கள் எல்லோரும் அவர்கள் கைப்பிடியில் அடங்கியவர்கள் என்று நினைத்துக்கொண்டு இந்த மாதிரி மதிகெட்டுத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். மக்கள் உணர்ச்சியை அறிந்துகொள்ள முடியாத-மதிக்கத் தெரியாத அந்தப் படுபாதகர்கள்.

வெறுப்பும் பகையும் மட்டுமே யளிக்கக்கூடிய பல தீர்மானங்களைச் செய்த அந்த ஆத்திரக்காரர்கள், தமிழ்மக்களுக்குக் குடியரசுத்தலைவரும் பண்டிதர் நேருவும் கொடுத்த வாக்குறுதிகளைக் கண்டித்துத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். 1965-ம் ஆண்டுக்குப் பின்னரும் ஆங்கில மொழி தொடர்ந்து நீடிக்கும் என்று குடியரசுத்தலைவரும் பிரதமரும் வாக்குறுதி அளித்ததை வன்மையாகக் கண்டிப்பதாக இந்த வெறிக்கும்பல் மாநாட்டிலே முடிவெடுத்திருக்கிறது!

இந்த வெறிக்கும்பல் நாட்டு நடப்பும் உலகப்போக்கும் தெரியாமல் இவ்வாறு ஆத்திரத்தால் மாநாடு கூட்டித் தீர்மானம் செய்வதை அறியும்போது ஒருகணம் நமக்கு ஆத்திரம் விடுகிறது! அடுத்த கணமே இந்த வெறிக்கும்பலின் போக்கையும், இதனால் இந்தக் கும்பல் அடையப்போகும் பலனையும் எண்ணிப் பார்க்கும்போது இரக்கம் தோன்றுகிறது. மக்கள் உணர்ச்சிக்கு மதிப்பளித்துக் குடியரசுத்தலைவரும் மற்றவர்களும் அவ்வாறு உறுதிமொழி கொடுத்திரா விட்டால் அன்று என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட இந்தக் கும்பலுக்கு உணர்ச்சியோ அறிவோ கிடையாது என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

குடியரசுத் தலைவரும், பிறரும் உறுதிமொழி கொடுத்திருந்தாலும் இன்று அரசாங்கத்தின் போக்கைப் பார்க்கும்போது அவர்கள், மக்களுடைய எழுச்சியைத் தவிர்ப்பதற்காகச் சொன்ன ஏமாற்று வார்த்தைகளாகத்தான் நாம் அவர்களின் உறுதிமொழிகளைப் பற்றி எண்ண வேண்டியிருக்கிறது.

மேலும், இந்த இந்திவெறிக் கும்பலின் கையாட்களாகவோ - அல்லது இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களாகவோ அவர்கள் இருக்கக்கூடும் என்றும், இந்தக் கும்பலுக்குப் பயந்தோ, பணிந்தோ அல்லது உடன்பட்டோதான் அவர்கள் துறைதோறும் துறைதோறும் இந்தியைப் புகுத்தி நாளுக்குநாள் இந்தத் துணைக்கண்ட முழுவதிலும் இந்தி சர்வாதிகாரத்தைப் பரப்பி நிலைப்படுத்தப் பார்க்கிறார்கள் என்றும் நாட்டு மக்கள் எண்ண வேண்டியிருக்கிறது.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்ட இருப்புப்பாதை, அஞ்சல் நிலயம், பாதுகாப்பு ஆகிய துறைகளிலெல்லாம் ஆங்கிலத்தை எடுத்துவிட்டு இந்துஸ்தானியைத் திணிக்கவேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம் துவங்கப் போகிறதாம் இந்தி வெறியர் கும்பல். இந்தப் போராட்டத்திற்குரிய திட்டங்களை வகுப்பதற்கு 1961-ஆம் ஆண்டில் மற்றொரு வெறி மாநாடு கூட்டப்போகிறதாம் இந்தக் கும்பல்! இந்தத் துணைக்கண்ட முழுதும் பரவியுள்ள நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் கொண்டவர்கள், இதுவரை இந்தித் திணிப்பை எதிர்த்து அரசாங்கத்துடன் மட்டுமே போராடவேண்டியிருந்தது. இப்போது இந்த இந்தி வெறிச் சம்மேளனத்தினர் நல்லவர்களின் நாட்டுப் பற்றுக்கும் மொழி யுணர்ச்சிக்கும் வேலை வைக்கக் கிளம்பியிருக்கிறார்கள்.

இந்தியைத் திணிக்க வருகின்றவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மாநில அரசு வழியாகத் திணிக்க முயன்றாலும் சரி, மத்திய அரசு வழியாகத் திணிக்க வந்தாலும் சரி, தமிழ் நாட்டில் கால் வைக்க முடியாது என்பதை அந்த வெறிக் கும்பலுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம். மீறிக் கால் வைத்தால் அந்தக் கால் திரும்பிக் கிடைக்காது என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ளட்டும்.

இந்தித் திணிப்பு எந்த வடிவில் எந்த பலத்தில் எந்தத் துணையோடு வந்தாலும் அதை எதிர்த்து முறியடிக்கத் திண்டோள் மறவர்கள் இலட்சோப இலட்சம் பேர் தமிழகத்திலே காத்துக் கிடக்கிறார்கள் என்பதை அந்த வெறியர்களுக்கு அறிவிக்கிறோம். தமிழர்கள் அவர்களுடைய வாலாட்டத்தைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள் என்றும் எச்சரிக்கிறோம்!

தீபாவளியும் தினத்தந்தியும்

தீபாவளி வருகிறது!

இன்னும் நான்கு நாட்களில் ஐப்பசி மாதம் 3-ம் நாளுக்குச் சரியான ஆங்கிலம் 19-10-60 தேதியன்று தீபாவளி!

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டாடும் பண்டிகைகளிலேயே மிகப் பெரிய திருநாள்!

இந்தத் தீபாவளியைக் கொண்டாடுகிறவர்கள், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், இந்தப் பண்டிகையைப் பெருமைப்படுத்திப் பேசி வருகிறார்கள்!

காலையில் விடியுமுன் எழுந்து, எண்ணெய் தேய்த்துக் குளித்துக் கோடி யாடை யணிந்து, புதிய பலகாரங்கள் செய்து தின்பதும், வெடி (பட்டாசு) சுடுவதும், மத்தாப்புக் கொளுத்துவதும், கோவிலுக்குப் போய் வருவதும் தீபாவளியன்று சிறப்பாகச் செய்யப்படும் காரியங்கள்.

இப்படித்தான் பெரும்பாலானவர்கள் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் கங்கையில் நீராடிய பலன் கிடைக்குமாம்! கங்கையில் நீராடினால் என்ன பலன் கிடைக்குமோ? இதற்குப் பதில் எமலோகத்தில்தான் கிடைக்கும்! இல்லாவிட்டால் அந்த லோகத்துக்கு இந்த லோகத்தில் ஏஜண்டுகளாயிருக்கும் பஞ்சாங்கக்காரர்கள், சோதிடங்கள், புராண பண்டிதர்கள் ஆகியோர்களிடம் கிடைத்தாலும் கிடைக்கலாம்! கிடைத்தாலும் அது உண்மைதானா என்பதை அங்கே ஒரு முறை போய்ப் பார்த்து வந்தால்தான் தெரியும்!

தீபாவளிக் கொண்டாட்டம் ஏற்பட்டதைப்பற்றிக் கூறப்படுகிறகதை நமக்குத் தெரிந்ததுதான்.

நரகாசுரன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை யாண்டு வந்தான்.

அவன் பூசுரர்களைக் கொடுமைப் படுத்தினான். வடமதுரையையாண்டு வந்த கிருஷ்ணனிடம் பூசுரர்கள் போய் முறையிட்டார்கள். அவர்கள் துன்பத்தை துடைப்பதற்காக கிருஷ்ணன், நரகாசுரன் மீது படையெடுத்து வந்தான்.

நரகாசுரனுடைய கோட்டையை கிருஷ்ணனுடைய படைகள் வளைத்துக் கொண்டன.

கோரமான போர் நடைபெற்றது.

நரகாசுரனுடைய கதாயுதத்தால் கிருஷ்ணன் மூர்ச்சையடைந்து விழுந்துவிட்டான்.

கிருஷ்ணனுக்குத் தேரோட்டி வந்த அவன் மனைவி சத்தியபாமா போரைத் தொடர்ந்து நடத்தினாள்.

கடைசியில் நரகாசுரனைக் கொன்று விட்டாள்.

சாகப் போகும் நிலையில் நரகாசுரன் சத்தியபாமாவிடம் கேட்டுக்கொண்டான்.

"உலகினர் என்னை மறவாதிருக்க ஒரு வரம் கொடு" என்று கேட்டான்.

அதற்காகத்தான் நரகாசுரன் அழிந்த நாளை உலகத்தினர் தீபாவளியாகக் கொண்டாட வேண்டுமென்ற ஏற்பாடு அமுலுக்கு வந்தது.

உலகத்தினர் என்றால் இதில் கிருஸ்தவர், முகமதியர், பௌத்தர், ஜைனர், சமணர், ஆகியோர் சேர்த்தியில்லை.

அதுபோலவே, மார்க்சியவாதிகள், திராவிட கழகத்தினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆகியோரும் இன்னும் சீர்திருத்த நோக்கம் கொண்டுள்ளவர்களும் சேர்த்தியில்லை.

இவர்கள் நீங்கலாக மீதியிருக்கின்ற உலகத்தினர் நரகாசுரனுக்குச் சத்தியபாமா கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தீபாவளி கொண்டாடுகிறார்கள்.

தீபாவளியைப்பற்றிய கதை யிதுதான்! தீபாவளி கொண்டாட வேண்டும் என்று சொல்லுவதற்குக் காரணமாயிருக்கிற இந்தக் கதையில் கூறப்படுகிற காரணம் சிறிதாவது அறிவுக்குப் பொருத்தமா யிருக்கிறதா என்றால், கதையைப்பற்றி இப்போது யாரும் கவலைப்படவில்லை.

தீபாவளி வந்திருக்கிறது!

நெடு நாட்களாக இந்த நாட்டிலே கொண்டாடப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து கொண்டாடுவதால் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை கொண்டாடுபவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் தீபாவளிக்காக மூன்று நாட்கள் அரசாங்க விடுமுறை மக்கள் கோலாகலமாக விழாக் கொண்டாடட்டும் என்று அரசாங்கம் வசதி செய்து கொடுக்கிறது. அரசாங்க நிறுவனங்களிலும், பிற தொழில் நிலையங்களிலும், ஆண்டுக்கொரு முறை கொடுக்கும் போனசுப் பணம் தீபாவளிக்குமுன் கொடுக்கப்படுகிறது இதனால், வேலைகளில் இருப்பவர்கள் கவலையில்லாமல் தீபாவளி கொண்டாட வழி செய்யப்படுகிறது.

கல்கி, ஆனந்தவிகடன், கலை தமிழ்நாடு கலைமகள் தினத்தந்தி போன்ற பத்திரிகைகள் தீபாவளி மலர் வெளியிட்டு வாசகர்களை ஆண்டுதோறும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்து வருகின்றன.

காங்கிரசுக்காரர்கள், தீபாவளிக்குக் கதர் வாங்கிக் கட்டிக் குடிசைத் தொழிலுக்கு ஆதரவு தர வேண்டுமென்று தீபாவளிப் பிரசாரம் செய்கிறார்கள்.

தினத்தந்திப் பத்திரிகை இப்பொழுதே தீபாவளிப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டது. இரவு ராணிகள், நடிகை தேவிகள் எப்படியெப்படி தீபாவளிப் பண்டிகை கொண்டாடப் போகிறார்கள், என்னென்ன மாதிரிச் சேலைகளை எப்படியெப்படிக் கட்டுகிறார்கள் என்றெல்லாம் படம் போட்டுத் தீபாவளிக்கு மக்களைத் தயார்ப்படுத்துகிறது நாம் தமிழர் இயக்கத்தின் ஏடு தினத்தந்தி.

நாம் தமிழர்கள் தினத்தந்தியின் உதவியோடு நடிகைகளைச் சுற்றி வலம் வந்து தீபாவளி கொண்டாடலாம்.

சென்னைமா நகரில் போலீஸ் கமிஷனர் விடுத்திருக்கும் ஓர் உத்தரவு-தீபாவளியின் வேகத்தைக் குறைப்பதாயிருக்கிறது. இதனால் தீபாவளியின் வேகம் குறைந்து தன்னுடைய தீபாவளி சீசன் வியாபாரம் பாதிக்கப் படுமோ என்று எண்ணித் தினத்தந்தி போலீஸ் கமிஷனர் மீது சீறி விழுகிறது!

"பட்டாசு கொளுத்துவதால் தீ விபத்து ஏற்படுகிறது" ஆகவே. தெருவில் பட்டாசு கொளுத்துபவர்கள் தண்டிக்கப் படுவார்கள்! 50 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படுவார்கள்" என்று கமிஷனர் அறிக்கையிட்டிருக்கிறார். இது தினத்தந்திக்குச் கோபம் ஊட்டுகிறது.

தெருவில் பட்டாசு வெடிக்கக் கூடாதென்றால், வீட்டுக்குள்ளேயா வெடிப்பது? வீடு தீப்பற்றி எரியாதா? என்று ஆத்திரப்படுகிறது தினத்தந்தி தெருவில் பட்டாசு வெடித்தால் அப்படி என்ன ஆபத்து வந்து விடப்போகிறது? கணக்குக் காட்டுங்கள்: அமெரிக்காவில் கிருஸ்துமஸ் கொண்டாட்டத்தில் ஏற்பட்டதைக் காட்டிலும் எந்த வருடமாவது தீபாவளியால் சாவு ஏற்பட்டிருக்கிறதா என்று புள்ளி விவரம் கேட்டு வாதாடுகிறது தினத்தந்தி.

பட்டாசு இல்லாத தீபாவளி பருப்பில்லாத சாம்பார். இதற்குத் தீபாவளியே கொண்டாடக் கூடாது என்று போலீசார் தடை விதிக்கலாமே! என்று மனம் பொருமி எழுதியிருக்கிறது தினத்தந்தி.

தினத்தந்திக்குத் தீபாவளியின் மேல் ஏன் இத்தனை மோகம்? அது தினத்தந்திக்குத்தான் தெரியும்! நாம் தமிழர்களுக்குத் தெரிந்திருக்குமா என்பது சந்தேகம் தான்!

என்னைக் கேட்டால், இந்தத் தீபாவளி என்ற பண்டிகைக்கு நாம் இவ்வளவு ஆர்ப்பாட்டம் போடத் தேவையில்லை. வடநாட்டான் புராணத்திலே ஏதோ எழுதி வைத்திருப் பதற்கு நாம் விழாக் கொண்டாட வேண்டியதில்லை.

நரகாசுரன் திராவிடனாயிருக்கலாம் என்று கருதப் படுகிறது. அவன் திராவிடனாக இல்லா விட்டாலும், அவன் இறந்ததற்காக நாம் விழாக் கொண்டாட வேண்டியதில்லை.

அவன் இறந்ததால் யாருக்கு நன்மையோ, அவர்கள் கொண்டாடுவதில் பொருளிருக்கிறது. அவன் இறந்ததால் திராவிடர்களுக்கு-தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை - ஏற்பட்டதாக கதையிலும் எழுதி வைக்கப் படவில்லை. பூசுரர்களின் ஆசை தீர்ந்ததற்காக அவர்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால், நாம் தமிழர்கள் ஏன் கொண்டாட வேண்டும்?

தீபாவளிக் கதையின் மீது நம்பிக்கை வைத்தால், நாம் தீபாவளியை ஒழித்துக் கட்டவேண்டும் என்று நினைப்பதுதான் பொருத்தமானது. ஆனால், அது பொய்க் கதை என்று நாம் அறிவோம். ஆகவே ஏதோ பரம்பரையாகக் கொண்டாடப் பட்டு வருகிறது என்று காரணமில்லாமல் நாமும் கொண்டாடுவது என்றால் அதுவும் அறிவுக்குப் பொருத்தமானதல்ல.

தீபாவளி கொண்டாடப் படும் வரையிலே, அது கொண்டாடப் படுவதற்குக் காரணமான கதையும் இருந்து தான் தீரும். கதையை மறந்துவிட்டுத் தீபாவளி கொண்டாடுவதாக வெறும் வீம்புக்கு வேண்டுமானால் சொல்லலாம்.

தீபாவளிக் கதை தமிழனுக்கு-திராவிடப் பெருங்குடியினருக்கு இழிவு சேர்க்கும் கதையாக இருக்கிறது! தமிழ் மறவன் ஒருவனைக் கொன்றழித்ததற்காக வெற்றி கொண்டாடும் நிகழ்ச்சியாக இருக்கிறது!

நரகாசுரன் திராவிடன் என்பதற்காக அவனை இழிவு படுத்த அவன் பிறப்பைப் பற்றிக் கேவலமான கதையொன்று கட்டி விட்டிருக்கிறார்கள் புராணவாதிகள்.

இரண்யாட்சன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுக்கடியிலே போய் ஒளிந்து கொண்டானாம். உடனே விஷ்ணு பன்றியாக மாறி அவனிடமிருந்து பூமியை மீட்டுக் கொண்டு வந்தாராம. அப்போது, விஷ்ணுவின் உடலில் பூமியின் உடல் உரசியதாம் பூமிக்குக் காமம் ஏற்பட்டதாம். அதைத் தெரிவிக்கவும் விஷ்ணு பூமியோடு கலவி செய்யப் பிறந்த குழந்தைதான் நரகாசுரனாம். தனக்குப் பிறந்த மகனையே தன் மனைவியை விட்டுக் கொன்று அவனுடைய மனைவிகள் பன்னீராயிரம் பேரையும் தாரமாக்கிக் கொண்டாராம் கிருஷ்ணன். தீபாவளி கொண்டாடும் திருவாளர்கள் இந்தக் கதையைக் கேட்ட பிறகாவது மடமை ஒழிவார்களா என்று தான் நாம் ஏங்கி எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கதையை மறந்து விட்டுத் தீபாவளி கொண்டாடுகிறேன் என்று சொல்லுகிற தமிழன் மானமுள்ள தமிழனாக மாட்டான். தீபாவளிக்காக வக்காலத்துவாங்கிப்பேசுகிற தமிழன் அறிவுள்ள தமிழனாக மாட்டான். அவன் நாம்தமிழர் என்று கூவினாலும் நல்ல தமிழனாகமாட்டான்.

இன்ஷியல் முதற்கொண்டு தமிழிலே வேண்டும் என்று தமிழ்ப் பற்றுப் பிரசாரம் செய்கிற தினத்தந்தி விளையாட்டு முதற் கொண்டு தமிழ் விளையாட்டாக விளையாட வேண்டுமென்று தலையங்கம் தீட்டுகிற தினத்தந்தி தீபாவளிக் கொண்டாட்டம் கெட்டுப் போகிறதே என்று கனன்று எழுதுவது ஏன்? மானங் கெட்டா? அல்லது பதில் கெட்டா?

வேத்தரசன்

தென்றல் முல்லை இரண்டுக்கும்

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முனபணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை :—

மானுமதுரை	பாலக்காடு
காரியாபட்டணம்	சிங்கநல்லூர்
சோளிங்கபுரம்	தங்கச்சிமடம்
மகாபலிபுரம்	கன்னமங்கலம்
திருத்தணி	சுங்குவார்சத்திரம்

விவரங்கட்கு

தென்றல் : சென்னை-6

அவர்களுக்குத் தைரியம் அதுதான்!

அருப்பைக் கிழார்.

அன்று வெள்ளிக் கிழமை மாலை 6-30 மணி எழும்பூர் இரயில் கெடியில் வழக்கம் போல் கூட்டம் ஏராளமாக இருந்தது.

திருவனந்தபுரம் துரித வண்டி வேதிகை (பிளாட்பாரம்) ஓரம் நின்று கொண்டிருந்தது அதன், பொறுப்பாளர் (கார்டு) பச்சை விளக்கை உயர்த்தி வண்டி புறப்படலாம் என்று சமிக்ஞை காட்டிக் கொண்டிருந்தார்.

என்ன காரணத்தாலோ, அதன் பாகன் (டிரைவர்) உடனே வண்டியை நகர்த்தாமல் காலங்கடத்திக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் வேகமாக ஒருவர் வண்டியை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவருடைய கால்கள் வேக நடையிலிருந்தாலும். நிதானமாக ஒவ்வொரு பெட்டியையும் கண்ணோட்டம் விட்டுக் கொண்டே வந்தவிதத்தைப் பார்க்கும் எவருக்கும், அவர் இரயில் பயணத்தில் மிகவும் பழக்கப்பட்டவர் என்பது தெரிந்து விடும்.

அவர் உடுத்தியிருந்த மடிப்புக் குலையாத தூய வெள்ளைக் கதராடையிலிருந்தும், சிப்பாவிலிருந்தும், அவரை ஒரு காங்கிரசுப் பிரமுகர் என்று, திட்டமாகச் சொல்லலாம்!

வண்டித் தொடரிலிருந்த உயர் வகுப்புப் பெட்டி, ஒதுக்கப்பட்ட (ரிஸர்வடு) பெட்டி தபால் பெட்டி, பெண்கள் பெட்டி, பாதுகாவலர் பெட்டி, சாமான்களின் பெட்டி. இவைகள் நீங்கலாக மீதியுள்ள பெட்டிகள் மிகச்சிலவே.

அந்தச் சில பெட்டிகளில் அடைந்து கிடந்த பயணிகளும், மூட்டை முடிச்சுகளும் கணக்கில் அடங்கா.

ஆயினும் அந்தப் பெட்டிகளின் ஒன்றில் இரண்டு அறைகள் மட்டும் கூட்டமில்லாமல் இருந்தன.

வாயில் ஓரமாக இருந்த ஒரு அறையில் வாடாத் திருமேனிகளான 4 பேர் கதராடைகள் பூண்டு கம்பீரமாக வீற்றிருந்தனர்.

அதற்கடுத்த உள்ளறையில், திரையுலக விண்மீன்களைப் போல அலங்கரித்துக் கொண்ட பெண் ஒருத்தி, ஒன்றுக் கொன்று 10 மாதங்களே இளமையாக இருக்கும் என்று கருதத்தக்க 4 குழந்தைகள், அவளுடைய படுக்கை தர்மாஸ் பிளாஸ்க்' 'கைப்பை' பிளாஸ்டிக் பொம்மைகள்' 'பிஸ்கட் டின்கள்' ஆகியவற்றால் அறையை நிறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். சர்க்காரின் குடும்பக் கட்டுப்பாட்டைப் பரிகசிப்பது போல் அவள் இருந்தாள்.

அவளை வண்டியின் சொந்தக்காரி என்றே எல்லாரும் நினைத்துக் கொண்டார்களோ என்னமோ, பயணிகள் எவரும் அவளிருக்கும் பக்கமாகப் போகவே இல்லை. எனவே, அவள் ஒய்யாரமாக அமர்ந்து சாளரத்திற்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு பெட்டியாகக் கவனித்துக் கொண்டு வேகமாக வந்த காங்கிரஸ் பிரமுகருக்கு கூட்டமில்லாமல் இருந்த இந்தப் பகுதி தெரியவே, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

ஏற்கனவே அங்கிருந்த காங்கிரஸ் பிரமுகர்களுக்குத் திடீரென்று நுழைந்த புதியவரின் வருகை சங்கடமாக இருந்தது.

தங்களுடைய ஏக போகத்திற்கு கேடு வந்தது போன்ற உணர்சியால் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

இதற்கிடையில் நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே வண்டியும் நகர ஆரம்பித்தது.

புதிதாக நுழைந்தவர் முதலில் உள்வறைப் பக்கமாகச் சென்று உட்கார விரும்புவதுபோல் எட்டிப் பார்த்தார்.

அங்கிருந்த தாக்கணங்கையும், அவளுடைய குழந்தை குட்டி சாமான் தட்டு முட்டுக்களையும் பார்த்த பிறகு என்ன நினைத்தாரோ "நீங்கள் உமன் கம்பார்ட்மெண்டுக்குப் போயிருக்கலாமே" என்றார் அவள் எதுவுமே பேசாததால் திரும்பி வந்தார்.

பிறகு. மற்றக் காங்கிரசுக் காரர்களுக்கு மத்தியில் வந்து உட்கார்ந்தார்.

இதற்குள் ஏக போகத்தை இழந்த வருத்தம் அவர்கட்கும் சற்று நீங்கி விட்டது அதுவரையில் தன்னுடனும் பேசாமல். அவர்களுக்கிடையிலும் பேசாமல் திங்கட்கிழமைக் காந்தி போலிருந்த நால்வரையும் பார்த்துப் பேச்சைத் தொடங்கினார் புதியவர்!

'4 பேரும் எதுவரை போக வேண்டும்?"

"விழுப்புரம் வரைதான். நீங்கள்......?"

"நான் மதுரைக்குப்போக வேண்டும். நல்ல வேளை! தூங்கமுடியாதோ என்று நினைத்தேன்! விழுப்புரம் தாண்டும் போது தாராளமாகத் தூங்கலாம்— உங்கள் தயவால்! நமக்கெல்லாம் சொந்த ஊரே விழுப்புரம் தானே?"

"இல்லை! இல்லை! சொந்த ஊர் விருத்தாசலம் பக்கம்—கிராமம்."

"விழுப்புரத்தில் என்ன அலுவலோ?"

"அலுவல் ஒன்றுமில்லை. நாளை காமராசர் விழுப்புரம் வருகிறார்."

"ஓகோ! நானும் காமராசரைப் பார்க்கத்தான் சென்னைக்கு வந்தேன். அவர் தென்னாற்காடு ஜில்லாவில் சுற்றுப்பயணம் செய்வதாகச் சொன்னார்கள். ஊருக்குத் திரும்புகிறேன். நல்லதாப் போச்சு உங்களைக் கண்டது! நானும் காமராசரைச் சந்திக்கலாம் பாருங்கள்!'

அப்படியானால் மதுரைக்குப் போக வில்லையா?"

"கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வரும்போது ஊருக்குப் போவதா முக்கியம்?"

'நமக்குச் சொந்த ஊர் மதுரை தானே?'

"ஆமாம்"

"மதுரையிலே யாரு...?"

"ஆகஸ்டுத் தியாகி அருணாசல முதலியார் தெரியுமோ?"

"ஆமா"

அவருடைய மருமகன்தான் நான்!"

"உங்கள் பேரு?"

"மோ. சடி. முத்தையா முதலியார் கேள்விப் பட்டிருக்கிறீர்களோ?'

"ஆமாம்"

"நான்தான் முத்தையா முதலியார்"

"சரி சரி! ரொம்ப வேண்டிய ஆளாக — சொந்தக்காரராக —வந்து விட்டீர்கள்! ஆமாம் காமராசரிடம் என்ன அலுவல்?"

"ரேயான் இறக்குமதிப் 'பெர்மிட் சம்பந்தமாக அவரைக் கொஞ்சம் கண்டு பேச வேண்டும்! அதிருக்கட்டும்! தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி, என்று ஜில்லா ஜில்லா வா சுற்றுப்பயணம் செய்கிறாரே காமராசர் எதற்கு?

"எதற்கா? இந்த தி மு. க. க்கள் ஊரூராய் போய் பேசிக் கொண்டிருக்கிறார்களே! ஜனங்கள் மனதை கெடுத்துப் போட்டால் என்ன செய்வது?"

"தி மு. க. கூட்டங்களிலே வட நாட்டுச் சர்க்காரைக் குறை சொல்கிறார்கள். திராவிடநாடு வாங்க வேண்டும் என்கிறார்கள். அதில், காமராசர் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது?

'காமராசர் சொல்ல என்ன இருக்கிறதா? திராவிடநாடு வாங்க வேண்டும் என்றால் சென்னையில், தி. மு, க. மந்திரிசபை இருக்க வேண்டும் என்றல்லவா அவர்கள் சொல்கிறார்கள்! அப்படியானால் காமராசருக்கு-காங்கிரசுக்கு ஓட்டு போடக் கூடாது என்றுதானே அருத்தம்!

"ஆமாம் இதற்குக் காமராசர் என்ன சொல்கிறார்?"

"அவர் என்ன சொல்வார்? அவர்கள் பேச்சை நம்பாதீர்கள் நாட்டைக் கெடுத்து விடுவார்கள். நாங்கள்தான் சுயராஜ்யம் வாங்கிக் கொண்டு வந்தோம். இப்போது நாட்டை ஆள்கிறோம். முன்னை விட இப்போது எல்லாரும் நல்லாத்தான் இருக்கிறோம். இதைக் கெடுத்துவிட்டு தி. மு. க சொல்கிறபடி நாட்டைப் பிரித்தால் சுதந்திரமே திரும்பிப் போய் விடும் என்று சொல்கிறார்!"

"ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"அவர்கள் என்ன பேசிக் கொள்வார்களோ யாருக்கு தெரியும்! ஆனால், ஒவ்வொரு ஊரிலேயும் இருக்கிற பெரிய பெரிய பண்ணை முதலாளிகள், பணக்காரர்களை எல்லாம் கூப்பிட்டு விட்டு, தி. மு. கவை வளரவிடாமல் கண்ணும் கருத்துமாக் கவனித்து வர வேண்டும் என்று காமராசர் எச்சரிக்கை செய்துகொண்டே வருகிறார்.'

"தி. மு. கவின் வளர்ச்சியைப் பண்ணையார்களும் பணக்காரர்களும் எப்படித் தடுக்கமுடியும்?"

"ஏன் முடியாது. பெரிய நகரங்களிலே, பட்டினங்களிலே, ஒருத்தருக்கொருத்தர் தொடர்பிருக்காது. ஒருத்தன் சொல்வதை ஒருத்தன் கட்டுப்பட்டுக் கேட்கமாட்டான். கிராமங்களிலே பண்ணையார்களும் பணக்காரர்களும் தானே இராஜா! அவர்களை மீறி யார் என்ன செய்யமுடியும்?

"தேர்தலின்போது ஓட்டுப் போடுகிறதை பண்ணையார் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?"

"ஓட்டுப் போடுவதை ஏன் பார்க்க வேண்டும். நாலு நாட்களுக்கு காலையும் மாலையும் முதலாளிகள் வீட்டிலே விருந்துகளை வைத்து. ஊரை அடக்கிச் சோற்றைப் போட்டுவிட்டு, தேர்தல் அன்றைக்கு ஓட்டுக்கு இரண்டிரண்டு ருபாயும் கொடுத்து, ஒவ்வொருத்தனையும் 'உண்ட சோற்றுக்கும் வாங்கின பணத்திற்கும் துரோகம் பண்ணமாட்டேன்' என்று பாலில் அடித்துச் சத்தியம் பண்ணச் செய்துவிட்டால், ஒருத்தன்கூட மாறிப் போகமாட்டான்- மற்றவனுக்கு ஓட்டும் போடமாட்டான்"

"அப்படி என்றால் பழைய தெய்வ நம்பிக்கை இருக்கிறவரைக்கும் பயமில்லை என்று சொல்லுங்கள்!"

"தெய்வ நம்பிக்கை மட்டுமா? காங்கிரசு தோற்றால் நீங்கள் எல்லாம் இந்தஊரிலே குடியிருக்க முடியாது! என் முகத்திலேயும் விழிக்கமுடியாது! என்று ஊர்ப் பெரியதனக்காரர்கள் சொன்னால். ஒரு குஞ்சுகூட மாறிப் போகாது. 'கப்சிப்' என்று ஒடுங்கிப் போவார்கள் தெரியுமா? ஏனென்றால், எல்லாருடைய குடுமியும் எப்படியாவது ஒரு விதத்தில் பெரியதனக்காரன் கையிலே சிக்கித்தான் இருக்கும்! அதனாலே, மீறிப் போகப் பயப்படுவார்கள்!"

"சரி! தி. மு. க. மட்டும் எதிர்க்கும் போது. நீங்கள் சொல்கிறபடி கிராமங்கள் இருக்கலாம்.

இந்தப் பாழாப்போன இராசகோபாலாச்சாரியும் தி. மு. கவுக்குத் துணை சேர்ந்து நின்றால் கிராமங்கள் எப்படி இருக்கும்?"

"சேரட்டுமே! இராசகோபாலாச்சாரிக்கு என்ன முடியும்? காமராசர் மாதிரி கிராமம் கிராமமாச் சுற்றி, அங்கங்கே இருக்கிற பெரிய புள்ளிகளை எல்லாம் கைக்குள்ளே போட்டு வைக்கமுடியுமா?"

"காமராசர் மாதிரி இராசகோபாலாச்சாரியும் திரிந்தால்தானா? அவருடைய ஆட்கள் போனால் போதாதா?"

"அவருடைய ஆட்கள் யார்? இப்போது சில பேர் சுதந்திராக் கட்சியில் இருக்கிறார்களே அவர்களா? அவர்களால் என்னமுடியும்? படித்த சில பணக்காரர்களும், ஆதிக்கமிழந்த சில ஜமீந்தார்களும் இருக்கிறார்கள்? அவர்களால் ஒரு நாட்கூடப் பிரயாணம் செய்யமுடியாதே! அதுமட்டுமா? காமராசர் திறமையே தனி! அவர் திறமைக்கு ஈடாக தமிழ்நாட்டிலேயே ஆளில்லை! எப்படி என்று கேட்கிறீர்களா? தெற்கு வடக்காக எடுத்துக் கொண்டால்; கன்னியாகுமரியிலே இருந்து திருப்பதி வரையிலும், கிழக்கு மேற்காகப் பார்த்தால்; கீழ்க்கடலில் இருந்து மேற்கு மலைத் தொடர்ச்சி வரையிலும், எத்தனை நகரம் பட்டி தொட்டி உண்டோ, அத்தனையிலும்

—3-ம் பக்கம் பார்க்க—

மல்லிகைப்

25. வலைக்குத் தப்பிய மான் குழியில் சிக்கியதுபோல்.

திடீரென்று ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியைக் கண்டு தங்கம் திக்பிரமையடைந்து நின்றாள். காட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு வெளியே நின்ற ஜீப்கார் புறப்படும் சத்தம் கேட்ட பிறகுதான் தங்கம் தன்னிலையடைந்தாள். அவளுக்கு எதிரில் ஏழெட்டுப் பேர் கையில் துப்பாக்கிகளுடன் நின்று கொண்டிருந்தார்கள் அத்தனையும் வேட்டைத் துப்பாக்கிகள். அந்த மனிதர்களின் நடுவிலே நின்ற ஒருவன் தங்கத்தின் பார்வையிலே பட்டபோது அவனை எங்கோ பார்த்த மாதிரியாக இருந்தது. அவனோடு நெடுநாள் தொடர்பு கொண்டு பழகியிருப்பது போலவும் தங்கத்துக்குத் தோன்றியது. எங்கே? எங்கே? என்று யோசித்துப் பார்த்தாள் - தெரியவில்லை. அவன் யார்? யார்? என்று எண்ணிப் பார்த்தாள் - தெரியவேயில்லை அவள் வேறு எங்கும் போனதில்லை. போன இடங்களில் யாரும் ஆடவருடன் பழகியதுமில்லை. ஆனால், யாரோ ஒருவனைத் திடீரென்று தன்முன் வந்து நிற்கும் அவனை, எங்கோ பார்த்தது போலவும், பழகியது போலவும் தனக்குத் தோன்றியது கண்டு தங்கம் வியப்படைந்தாள். நெடுநேரம் கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்த தங்கத்திற்குக் கடைசியாக ஒரு சிறு ஞாபகம் வந்தது.

ஆம். ஜமீந்தார் மாளிகைக்கு அவர்கள் புறப்பட்டு வந்தபோது, பஸ் ஏற முனைந்த சமயம், ஒருவருக்குத் தான் இடமிருந்தது என்று கண்டக்டர் சொன்னானே, அந்தச் சமயம் இறங்கிக் கொண்டு இடங்கொடுத்த இளைஞன் இவனேதான்! அப்போது கூட அவனை எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது, தங்கத்திற்கு நினைவில் மாறாமல் இருந்தது. ஆனால் அது மட்டுமா - அதற்கு முன் அவனை எங்கே பார்த்திருக்கிறோம் என்பது மட்டும் அவளுக்கு இப்போதும் சரி அப்போதும் சரி சற்றேனும் நினைவுக்கு வரவில்லை.

தன்னையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் தங்கத்தைப் பார்த்து, "அம்மா, நீங்கள் யார்? எப்படி இங்கே வந்து சேர்ந்தீர்கள் அந்த முரடர்கள் யார்?" என்று அந்த இளைஞன் கேட்டான்.

அவன் குரல் கூட அவளுக்கு மிகவும் பழக்கப்பட்டதாகத் தோன்றியது.

அவன் கேட்ட கேள்விகளுக்கு அவள் பதிலளித்தாள். நடந்த விஷயங்களை நடந்தவாறு கூறினாள்.

"ஆ! அப்படியா செய்தி? சிறிது நேரத்திற்கு முன் எனக்கு இது தெரியாமல் போய்விட்டதே. இல்லாவிட்டால் அந்தப் பாவிப்பயல்களைச் சுட்டே கொன்றுவிட்டிருப்பேனே!" என்று கோதிப்படைந்தவன்போல் கூறினான் அந்த இளைஞன்.

அப்போது தங்கம் சற்றே திரும்பிப் பின்னால் பார்த்தாள். அங்கே தரையில் தன்னினைவற்றுக் கிடந்தான் சுந்தரேசன்.

"ஆ! இந்தப் பாவி இன்னும் இங்கேதான் கிடக்கிறானா?" என்று பின்னால் நின்ற துப்பாக்கிக்காரர்களிலே ஒருவன் கூறிக்கொண்டே முன்னால் ஓடி வந்தான். அவன் வந்த வேகத்தைப் பார்த்தால், அப்படியே, கீழே கிடக்கும் சுந்தரேசனை அடித்துக் கொன்றுவிடுவான் போலிருந்தது. ஆனால், அந்த இளைஞன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"நண்பரே, அவன் கிடக்கட்டும். உணர்வற்றுக் கிடப்பவனை நாம் என்ன செய்தாலும் பயனில்லை. முதலில், இந்தப் பெண்ணை, அவருடைய வீட்டிலே கொண்டு போய் விட்டுவிட்டு வருவோம்!" என்று கூறினான் இளைஞன்.

எல்லோரும் அதற்கு இசைந்த பாவனையாகக் காணப்பட்டவுடன், அவன், "அம்மா, நீங்கள் வாருங்கள்-உங்களை மாளிகையிலே கொண்டு போய் விட்டுவிடுகிறோம் என்றான்.

எல்லாரும் அந்தக் காட்டுப் பிள்ளையார் கோயிலை விட்டு வெளியில் வந்தார்கள். இருட்டில் அந்தக் காடு முழுவதும் ஒரே பயங்கரப் பிரதேசமாகக் காட்சியளித்தது.

ஆங்காங்கே நிழல்கள் ஆடுவது-ஏதேதோ பயங்கரமான உருவங்கள் பேயாட்டம் போடுவதுபோல் காட்சியளித்தன. மரவண்டுகளின் இடைவிடாத ஓசையும், அங்கும் இங்குமாக ஏதோ ஊர்வதாலும்-மிருகங்கள் சில நடமாடுவதாலும் திடுதிப்பென்று ஏற்படுகின்ற சலசலப்பு ஓசையும், பயங்கரத் தன்மையை அதிகப்படுத்துவதாக இருந்தன. தங்கம் இதுபோன்ற ஒரு காட்சியை இதற்குமுன் கண்டதேயில்லை. அவளுக்கு மனத்துக்குள் ஒரே திகிலாயிருந்தது. ஆனால் அவள் அதை வெளிப்படுத்தவேயில்லை. கோயிலுக்கு வெளியில் வந்ததும், அந்த ஆட்களில் ஒருவன் தீப்பெட்டியை உரசினான். சிறிது நேரத்தில் அவர்கள் கையில் ஒரு தீப்பந்தம் எரிந்துகொண்டிருந்தது. இளைஞன் அந்த ஆளை நோக்கி, "ஏது, இந்தத் தீவட்டி?" என்று கேட்டான்.

"கோயிலில் ஒரு தூணருகில் சாற்றியிருந்தது. நான் எடுத்துக்கொண்டேன். நமக்கு வழிபார்த்துப் போகப் பயன்படுமே!" என்றான் அந்த ஆள்.

"உன் மூளை படுமூளைதான்?" என்று அந்த இளைஞன் அவனைப் பாராட்டிப் பேசினான். அந்தத் தீவட்டியின் வெளிச்சம் அவர்களுக்குப் பாதை காட்டப் பயன்பட்டது. ஆனால், பயங்கரம் அதனால் அதிகமாகியது என்றுதான் சொல்ல வேண்டும்.

தீவட்டியின் ஒளிநாக்கு காற்றில் அசையும் போதெல்லாம் காட்டு மர நிழல்கள் அங்குமிங்கும் ஆடிய காட்சி, அந்தப் பயங்கர உருவங்கள் நெருங்கி நெருங்கி வர முயல்வது போலவும், கையைக் காலை ஆட்டிக் கொண்டு விழுங்கவருவது போலவும், தோன்றியது.

தீவட்டி வெளிச்சத்தின் உதவியால், அவர்கள் அந்த அடர் காட்டின் ஊடே சிறிது தூரம் நடந்து சென்றார்கள். அந்த இளைஞனும் தங்கமும் முன்னே சொல்ல மற்ற நண்பர்கள் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு, அவர்கள் ஒரு பெரிய ஆலமரத்தடியை அடைந்தார்கள். அங்கே ஏழெட்டுக் குதிரைகள் சேணத்துடன் கட்டிக் கிடந்தன. ஆளுக்கொரு குதிரையை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள்.

"அம்மா, உங்களுக்குக் குதிரைச் சவாரி தெரியுமா?" என்று கேட்டான் அந்த இளைஞன்.

தங்கம் பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

"வண்டியெல்லாம் ஓட்டுறீங்க-குதிரையா ஓட்டத் தெரியாது?" என்று அந்த வேட்டைக்கார நண்பர்களிலே ஒருவன் கேட்டான்.

தங்கம் பரிதாபமாக அந்த இளைஞனைப் பார்த்தாள்.

அந்தப் பார்வையே அவளுக்குக் குதிரைச் சவாரி தெரியாது என்பதைப் புலப்படுத்துவதாக இருந்தது.

இதைக் கண்ட அந்த இளைஞன் பெருஞ்சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

அவர்கள் எல்லோருக்கும் ஆளுக்கொரு குதிரையிருந்தது. தங்கத்திற்குக் குதிரைச் சவாரி தெரியுமானால், அவளை ஒரு குதிரையில் ஏறிவரச் செய்து விட்டு மற்றவர்களில் யாராவது இருவரை ஒரு குதிரையில் வரச் சொல்லலாம். இப்போது அவளுக்குத் தெரியாது என்பதால், கூட ஒரு குதிரையிருந்தாலும் பயனில்லை என்று எண்ண வேண்டியிருந்தது.

அவன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த போது, வேட்டைக்கார நண்பர்களிலே ஒருவன், அந்த இளைஞனை நோக்கி, "உங்கள் குதிரையில் ஏற்றிக் கொள்ள

சான்பூர்,
4-10-60

கவிஞர் கண்ணதாசனவர்களுக்கு,

வணக்கம்.

தமிழ்க் குலம் தழைக்க வந்துதித்த கவிநாயகமாகத் தங்களைக் கருதுகிறவன் நான். தங்களின் அறிவொளி கண்டு, தமிழ் செழிக்கும் என்று மகிழ்ந்திருக்கிறேன்.

கல்கண்டு 2-10-60 இதழில் கேள்வி-பதில் பகுதியில்:

"நா. ப. மருதமுத்து, கொண்டித் தோப்பு.

கே: *கண்ணதாசன், கவலையில்லாத மனிதனில் ஏன் தோன்றுகிறார்?*

ப: மக்கள் தன்னை மறந்து விட்டார்களோ என்று அவருக்கு ஐயம்! அதனால் தோன்றி வைத்திருக்கிறார்!

கே: *தென்றல் பத்திரிகை இப்போது எப்படி இருக்கிறது?*

ப: ஒரு பாட்டுப் புத்தகம் மாதிரி இருக்கிறது! இதனால் இது இப்போது கடைகளில் கிடைப்பதில்லை. கோயிலுக்கு முன்னால் வாசலில் போட்டு விற்கிறார்களா என்று போய்ப் பார்க்க வேண்டும்!"

— என்று தமிழ்வாணன் வெளியிட்டிருக்கிறார்.

அவர்க்குப் பதில் கூறு முகத்தான் கீழ் வருமாறு எழுதியுள்ளேன்;

"கல்கண்டு ஆசிரியர்க்கு,

2-10-60 இதழில் மருதமுத்து என்பவர் கவிஞர் கண்ணதாசனைப் பற்றி விடுத்த வினாக்களுக்குக் கீழ்த்தரமான மறுமொழி கொடுத்திருக்கிறீர்கள். மக்கள் நினைவிலிருந்தும்-நெஞ்சத்திலிருந்தும் நீங்கக் கூடிய மோசமான நிலையில் கவிஞர் இல்லை; மாறாக முன்னிலும் பெருமளவு வளர்ந்திருக்கிறது அவர் புகழ்.

தென்றலையும் பழித்திருக்கிறீர்கள். கண்ணதாசனைத் தாழ்த்த வேண்டுமென்பதற்காக நீங்கள் சேற்றில் விழுந்திருக்கிறீர்கள்!

தமிழர் சமுதாயம் தலையெடுக்காததற்குக் காரணம்; ஒரு அறிஞன் மற்றொரு பேரறிஞனின் புகழ் கண்டு பொறுமையும் பொச்சரிப்புங் கொண்டு தூற்றிப் பழிப்பதே!

இது தங்களின் பார்வைக்காக எழுதலானேன்.

நீங்களும், உங்கள் கவிதையுள்ளமும் செழிக்க வாழ்த்துகின்றேன்.

தங்கள்
அன்செல்ம் ஜாஸ்

பந்தல்

நாரா நாச்சியப்பன்.

லாம் என்ருன். அந்த இளைஞன் தங்கத்தை நோக்கினுன். "அம்மா, என் குதிரையில் வருகிறீர்களா?" என்று கேட்டான்.

தங்கம் அவனைக் கூர்ந்து நோக்கினுள். அந்த முகத்திலே எவ்விதமான களங்கமும் காணப்படவில்லை. அந்த முகத்திலே எவ்விதமான தீய நோக்கத்தின் தன்மையும் பிரதிபலிக்கவில்லை. மேலும், அந்தமுகம்-அவளுக்கு ஏதோ முன் தொடர்புடையது போலவும்-ஏதோ தனக்கு உறவுடையது போலவும் தெரிந்ததால் அவள், அந்த இளைஞனுடன் ஒரே குதிரையில் செல்வதால் தவறு ஒன்றும் ஏற்படாது என்ற முடிவுக்கு வந்தாள். அந்த முடிவுக்குவருவதைத் தவிர அவளுக்கு அப்போது வேறு வழியும் எதுவும் இல்லை. அவள் அந்த இரவில் அந்தப் பயங்கரமான காட்டை விட்டுத்தப்பித் தன்தாய் தந்தையரிடம் போய்ச் சேர இருந்த ஒரே ஒரு மார்க்கம் அவனுடன் குதிரையில் போவதுதான். அதைவிட்டால். அவள் அந்தக் காட்டிலேயே தங்க வேண்டியதுதான். ஏழெட்டு ஆள்கள்கூட இருக்கும்போதே இதயமும் உடலும் நடுக்கமடையச் செய்துகொண்டிருக்கிற அந்தக் காட்டில் அவள் தன்னந் தனியாக எப்படியிருக்கமுடியும்? அதுவும் தவிர, கோயிலில் மூர்ச்சையாகக் கிடக்கும் சுந்தரேசன் கண் விழித்தால் என்ன செய்வானென்று சொல்ல முடியாது. அவன் எண்ணம் நிறைவேறவில்லை என்ற ஆத்திரத்தில் என்ன கேடு வேண்டுமானுலும் செய்வான். இந்த நிலையில். நல்லெண்ணமுடையவனைப் போல் தோற்றமளிக்கிறவனும், ஏதோ முன் தொடர்பு உள்ளவன்போல் காணப்படுகிறவனுமாகிய அந்த இளைஞனுடைய குதிரையில் ஏறிச் செல்லத் தங்கம் சம்மதித்தாள்.

"வருகிறேன்!" என்று அவள் வாய் திறந்து வார்த்தை சொன்னவுடனே அவன் தன் குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்து அருகில் நிறுத்தினுன். தங்கம் அதன்மேல் தாவி ஏறி உட்கார்ந்தாள். அவளுக்குப் பின்புறமாக ஏறி உட்கார்ந்துகொண்டான் அந்த இளைஞன். வலது கையால் லகானைப் பிடித்துக்கொண்டு இடது கையால் அவளை அணைத்துப் பிடித்தபடி குதிரையைத் தட்டிவிட்டான்.

முன்னுல், தீவட்டியுடன் ஒரு குதிரை செல்ல அதைத் தொடர்ந்து அந்த இளைஞனும் தங்கமும் ஏறியிருந்த குதிரை சென்றது. மற்ற குதிரைகள் பின்னுல் வந்தன,

பயங்கரமான காட்டு வழியில் இருட்டில் எந்தெந்தப் பக்கமோ குதிரைகள் வளைந்து வளைந்து சென்றன. அவை ஓடவில்லை-மெல்ல நடந்துதான் சென்று கொண்டிருந்தன. போகப் போகக் காடு நீண்டுகொண்டிருப்பது போலவும், மேலும் மேலும் அடர்ந்திருண்ட காட்டுக்குள்ளேயே செல்வதுபோலவும், அந்தக் காட்டு வெளியின் மையத்தை நோக்கியே சென்றுகொண்டிருப்பது போலவும் தங்கத்திற்குத் தோன்றியது. தான் விழுந்துவிடாமல் இருப்பதற்காக அந்த இளைஞன் தன்னை அணைத்துக்கொண்டிருந்தான் என்ற போதிலும், தங்கத்திற்கு உடலை என்னவோ செய்வதுபோலிருந்தது. ஆனுல், போகப் போக அந்த உணர்ச்சி மங்கிவிட்டது. குதிரை நடக்கும்போது அவன் மார்பின் மீது தன் உடல் மோதும்போதெல்லாம் இன்னதென்று சொல்லமுடியாத ஓர் உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. அது இன்பமா துன்பமா என்பதே புரியாமலிருந்தது. சில சமயம் அவளுக்கு அவன்மீது சந்தேகம் ஏற்படும். இவனும் ஒரு சுந்தரேசனுக இருப்பானே என்று தோன்றும். ஆனுல். சே! சே! அவரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை என்று மறுகணமே மனம் தைரியங்கொள்ளும்.

சுமார் ஒரு மணி நேரம் அந்தக் குதிரைப் பிரயாணம நடந்தது. அந்த ஒரு மணி நேரமும் ஓர் ஆண்டுபோலத் தோன்றியது கடைசியில், காடு குறைந்து-தீவட்டி வெளிச்சம் தெரியும் தூரத்தில் வீடுகளும் குடிசைகளும் கண்ணுக்குத் தென்பட ஆரம்பித்தன பிறகு. ஊரே வந்துவிட்டது முதல் இரண்டு வீதிகளில் செல்லும் வரை தங்கம் ஏதோ புது ஊருக்குள் நுழைந்துவிட்டதாகவே எண்ணிக் கொண்டாள். ஆனுல் மூன்ருவது வீதியைக் குதிரைகள் கடந்து செல்லும் போதுதான் 'இது கதலிப்பட்டணம்!" என்று அறிந்து அவள் உள்ளம் அமைதியும் ஆனந்தமும் அடைந்தது. எப்படியோ ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பினேம் என்ற மன நிம்மதி அவளுக்கு அப்போதுதான் முழுமையாக ஏற்பட்டது.

வீதிகளைக் கடந்து வந்த குதிரைகள் ஜமீந்தார் மாளிகையிருக்கும் வீதி முனை வந்ததும் டக்கென்று நின்றன. அந்த இளைஞன் தங்கத்தை நோக்கி, "அம்மா, இனிமேல் நாங்கள் வந்தால் வீண் சந்தேகத்திற்கு இடமாகும். ஏனென்ருல் இப்பொழுதே உங்களைத் தேட ஆரம்பித்திருப்பார்கள். இங்கேயிருந்து நீங்கள் மட்டும் தனியாகப் போய்விடமுடியுமா? அல்லது நான் கூட வந்து மாளிகை வரையில் விட்டுவிட்டு வர வேண்டுமா?" என்று கேட்டான்.

"இல்லை, நானே போய்விடுகிறேன்!" என்று தங்கம் தைரியமாகக் கூறினுள். உடனே அந்த இளைஞன் அவளைக் குதிரையிலிருந்து கீழே இறக்கிவிட்டான். அவள் இறங்கியவுடன் அந்தக் குதிரைகள் வேறு வீதியில் திரும்பி வேக நடை போட்டுப் பறந்து சென்றன.

தங்கம் தெருவோரமாக மெல்ல மெல்ல மாளிகையை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

வீதி முழுவதும் ஒரே அமைதியாக இருந்தது. பெற்றவர்கள் எங்கெங்கே தேடுகிருர்களோ, என்னென்ன நினைக்கிருர்களோ என்று பதறிக்கொண்டே நடந்தாள். அவள் மனம் விரைந்தது. ஆனுல் நடை விரையவில்லை அடிக்கடி கால்கள் தடுமாறின. வீதியில் கிடந்த பரற் கற்களில் காற் பெருவிரல் மோதிச் சில சமயம் வலியும் கொடுத்தது.

எதிரில் ஒரு நாய் வந்தது. அது தன்னைக் கண்டால் குரைக்குமோ என்று பயந்தாள் தங்கம். அது இவளை நோக்கியே வந்தது. சட்டென்று நின்ருள். நல்ல வேளை! அது சிறிது நேரம் அவள் பக்கத்தே வந்து முகர்ந்து பாத்துவிட்டுத் தன்பாட்டில் நடை போட்டது.

பிறகு தங்கம் தன் நடையைத் தொடர்ந்தாள்.

ஜமீந்தார் மாளிகை வந்து விட்டது. ஆனுல், தங்கம் தயங்கினுள். அங்கே மாளிகை வாசலிலே - நின்று கொண்டிருந்தது ஒரு ஜீப் கார் - தங்கத்தைத் தூக்கிக் கொண்டோடிய அதே ஜீப் கார் தானே அங்கே மாளிகை வாசலில் நின்றுகொண்டிருந்தது?

தங்கம் தயங்கினுள். ஒரு சுவர் ஓரமாக நிழலிலே ஒண்டிக் கொண்டு நின்ருள்.

அந்தப் போக்கிரிகள், தன்னை மடக்கிப் பிடிக்கத் தான் அங்கு வந்து காத்துக் கொண்டிருக்கிருர்கள் என்று எண்ணிய தங்கம் அங்கே நிற்பது கூடச் சரியில்லை என்று எண்ணினுள்.

திரும்பிப் போகலாம் என்ருல், எங்கே போவது? அந்த இளைஞனும் வேட்டையாடும் நண்பர்களும் அப்போதே அந்த இடத்தை விட்டுப் போய் விட்டார்கள், அவர்களுடனும் சேர்ந்து கொள்ள முடியாது. அருகில் இருக்கும் வீட்டுக்காரர்களில் யாரும் அவளுக்குத் தெரிந்தவர்கள் கிடையாது. மேற்கொண்டு இருட்டில் கதவு தட்டுவதும் சரியல்ல.

அப்போது ஓர் உருவம் மாளிகையிலிருந்து வெளிப்பட்டு ஜீப்பை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஜீப் புறப்பட்டால், அதன் முன் விளக்கின் ஒளியில் தான் இருப்பதைக் கண்டுபிடித்து விடமுடியும். இனிமேல் அந்த இடத்தை விட்டு ஓடுவதும் முடியாது. வழியில் போகும் போதே ஜீப்பில் இருப்பவர்கள் தன்னைக் கண்டுபிடித்துவிடுவார்கள்.

போகவும் முடியாமல் நிற்கவும் முடியாமல் தங்கம் விழித்துக் கொண்டு, பித்தம் பிடித்தவளைப் போல் அங்கே நின்றுகொண்டிருந்தாள். அப்போது இன்னும் இரண்டு பேர் வந்து அந்த ஜீப்பில் ஏறினுர்கள்.

ஆச்சு! ஜீப் புறப்படப் போகிறது. 'ஸ்டார்ட்' செய்து இயந்திரத்தின் சத்தமும் கேட்க ஆரம்பித்து விட்டது. அதோ முன் விளக்கையும் தட்டிவிட்டான் காரோட்டி. அந்த ஒளி நேரே தங்கத்தின் மீது பட்டது. அவள் கண் கூசியது.

"ஐயோ! மீண்டும் இந்தப் பாவிகள் கையில் சிக்கிக் கொண்டு விட்டோமே' என்ற நினைப்பு தங்கத்திற்கு ஏற்பட்டது.

"ஐயோ! என்று கத்தினுள். அவ்வளவுதான் தெரியும்,

அடுத்த கணம் அவள் உணர்வற்றுத் தெருவில் விழுந்தாள். ஜீப்பிலிருந்த ஆட்கள் ஸ்டார்ட் செய்தபடியே அதை நிறுத்திவிட்டு அவள் விழுந்த இடத்தை நோக்கி ஓடினுர்கள்.

தொடரும்



நண்டு கண்ட நன்னிலை

சொ. சு. கோமகன்.

ஆதவன் ஆழ்கடலுள் மூழ்கிக் கொண்டிருந்தான். ஆதவனின் சுடர்த்தீயாற் சுடப்பட்ட அலைகள் கொதித்துக் கூத்துகுதித்தன. தென்றல் தொலைவிருந்த தேன்மலரின் மாமணத்தை நன்றே கொணர்ந்து வர, இரட்டைப் பரிதி பூட்டிய இன தேரிலே தலைவன் இனிய முகத்தின னாய் இல்லம் திரும்பிக்கொண்டிருந் தான். வழியிலே அழகு உமிழும் தினைப்புனம் ஒன்று குறுக்கிட்டது அங்கே தலைவி தன் ஒரே தோழியொடு புனம் காத்து நின்றனள். தேரிலே சென்ற தலைவன் இயற்கையின் எழிலை எண்ணி எண்ணி வியப்புற்ற வண்ணம் வருங்கால் புனங் காக்கும் பூவைநல்லாளைக் கண்டு விட்டான். பரிக் கயிற்றைப் பற்றி இழுத்தான். பரிகள் நின்றன. தேர் நின்றது. ஆனால் தலைவனின் இதயம் கட்டவிழ்ந்து ஓடத் தொடங்கியது அதைப் பற்றி இழுக்கும் திறனை அவன் அப்போது இழந்து நின்றான்.

அவள் குஞ்சியழகும், கொடுந் தானைக் கோட்டழகும், மஞ்சள் அழகும் அவன் மனத்தினைப் பற்றி இழுத்தன. தன் நீண்ட புருவத்தை நெளித்து, கருவிழியை உயர்த்தி ஒருமுறை — ஒரேயொரு முறை அவனைக் கண்டாள் தலைவி. உடனே தலை கவிழ்ந்தாள். காற்பெரு விரலால் நிலங்கீறி நின்ற அவள் தன் மனத் திரையில் அவனுருவை எழுதி மகிழ்ந் தாள்.

தேரைத் தொலைவில் நிறுத்திய தலைவன் அவளருகே சென்றான். முதலில் என்ன பேசி உரையாடலைத் துவக்குவது என ஐயுற்றான். கை பற்ற எண்ணினான். 'கைபற்றுதல் காதலன்று; அது காமம்' என இடித்து உரைத்தது அவன் மனம். 'நான் உன்பாற் காதலுற்றேன்' என்று நவில நினைத்தான் அதுவும் தவறென்றது அவன் நெஞ்சு. இறுதியில் துணிந்தான். கேட்டான், இப்படி: 'உங்களூர் யாது?'

ஏற்கனவே நாணமுடைய நங்கை இவ்வினாவைக் கேட்டதும் மேலும் நாணமுற்றாள். அவளது நா எழவே இல்லை. முகம் குருதியின் விரைவோட்டத்தால் செங்கமலமாயிற்று. தலைவன் திரும்பிச் சென்றுவிட்டான். பேசாமை ஒன்றே காதல் வர்த்தகத் தின் பெருமுதல் என அவன் அறியான், என்ன?

மறுநாள். மாலைநேரம் அதே இடம். அதே நேரம். தலைவன் வந்தான். தன் தலைவியின்பால் தன்னுளக் கருத்தினை எப்படி உணர்த்துவேன் எனக் கை பிசைந்து நின்றான் தலைவன். தலைவி, தலைவன் எதற்காக இவண் வந்துளான், என்ன நவிலுவான் என்றெல்லாம் ஊகித்து உளத்திடை வைத்திருந்தாள். அவனோடு பேச அவளுள்ளம் துடித்தது. ஆனால் வாக்கு எழவில்லை. இதயத்தோடு உதடும் துடித்தது.

அப்போது தற்செயலாகத் தலைவனின் கவனம் அருகிருந்த ஊருணியை ஊடுருவிற்று. ஊருணியின் ஒப்பற்ற உயர்கரையில் வீற்றிருந்த நாவல்மரத்தினின்று ஒரு நாவற்கனி நீருள் வீழ்ந்தது. இதைக் கண்ட ஆண் நண்டொன்று விரைந்தோடி அதைப் பற்றித் தன் வளைக்குள் இழுத்துச் சென்று பெண் நண்டுக்கு அன்புடன் ஊட்டியது. இதைச் சுட்டிக் காட்டித் தலைவன் தோழியை நோக்கி 'இது அதன் நன்னிலை' என்றான்; பெருமூச்செறிந்தான். பின்னர் பேசுதற்கு ஒன்றும் இன்மையால் பேசாமல் ஊர் திரும்பினான். தலைவி அவன் சென்ற வழியையே உற்று நோக்கி உளம் நொந்தாள்.

சொல்லாற் பல சொல்வதைவிட உவமையாற் புரிய வைப்பதே சிறந்தது எனத் தலைவன் கருதியதனாற்றான், அங்ஙனம் உரைத்தான் தலைவனின் கருத்தைத் தலைவி உணர்ந்துகொண்டாள். ஆனால் தலைவியின் கருத்தினைத் தலைவன் உணர வேண்டுமே! ஒருதலைக் காதல் எனத் தலைவன் உளம் வருந்தக்கூடாதே என உன்னினாள் தலைவி. ஆனால் அருகே தோழியெனும் உருவில் அணங்கொருத்தி இருக்க எப்படி அவரை நேருக்கு நேர் காணுவது? உரையாடுவது? ஊடுவது? கூடுவது? ஆயிரமானாலும் அணங்கல்லவா அவள்?

மறுநாளும் தேரோட்டி வந்தான் தலைவன். போரிடைப் புறமிட்டோன் போர்க்களம் புகான் இது மரபு. ஆயின், காதலிடைப் புறமிட்டோன மீண்டும் மீண்டும் களம் புகுவான். இது இயல்பு. அவன் நாளங்களிலெல்லாம் குருதி அவளுருவைத் தாங்கி ஓடிற்று. 'மாலை வருக! மாலை வருக!' என்று மன்றாடி வந்தான், தலைவன். அவன் பற்றி இழுக்கு முன்னர் பரிகளே அவண் நின்றுவிட்டன; பழக்கமாகிவிட்டது! தலைவிக்குத் தலைவனைக் கண்டவுடன் அவனோடு பேச மிக ஆவல். குறிப்பாகத் தன் தோழியை நோக்கினாள். தோழி அவளது விழிமொழியை அறிந்தாள்; மேலும் கடந்த நாட்களின் நிகழ்ச்சிகளையும் ஒன்று விடாமல் அவளிடம் கூறி அவளை விட்டு அகன்று தூரத்தே இருந்த வெண்மணற் குன்றின் பின்புறம் ஓடி ஒளிந்தாள்

தலைவன் வந்தான். தலைவியின் அருகே எவருமற்ற அரிய வாய்ப்பினைக் கண்டான். இன்னும் அருகே வந்தான் தலைவி முதன் முறையாக நிமிர்ந்து அவனை நோக்கினாள். தன்னுள்ளே சுட்டுச் சுடர்விடும் நெருப்பை அணைக்கவல்ல அவனை ஆராய்ந்தாள். தணியாக் காதல் கொண்டாள். இருவரும் மனமொப்ப இனியேன் தடை? குயில்கள் இசை இசைக்க, குமரி மலர் கட்டவிழ்ந்து மணம் பரப்ப, காற்றுப் புக வழியின்றி இளங் காதலர் இருவரும் ஈருடலும் ஓருயிரும் என இன்புற்றுத் திளைத்தனர். கிட்டிய காதல் தேனை மட்டிலாது உண்டு மகிழ்ந்தனர். தோழி மணற் குன்றை விட்டு எழவே இல்லை.

இதோ அகநானூற்றிற் காணப் படும் அக்கவிதையைப் படியுங்கள்!

'தேர்சேண் நீக்கித்
தமியன் வந்து, "நும்
ஊர்யாது" என்ன
நணிநணி ஒதுங்கி
முன்னாட் போகிய
துறைவன் நெருநை
அகலிலை நாவல்
உண்துறை உதிர்த்த
கனிகவின் சிதைய
வாங்கிக் கொண்டுதன்
தாழை வேரளை
வீழ்துணைக்கு இடூஉம்
அலவற் காட்டி
"நற்பா லோரிவ"ணென
நினைந்த நெஞ்சமொடு
நெடிது பெயர்ந்தோனே;
உதுக்காண் தோன்றும்
தேரே; இன்றும்
நாம்எதிர் கொள்ளா
மாயின் தான்அது
துணிகுவன் போலாய்;
நாணுமிக வுடையன்;
வெண்மணல் நெடுங்கோட்டு
மறைகோ,
அம்மதோழி
கூறுமதி நீயே"

— அகம்-380.

தலைவனின் காதலை ஏற்றுக்கொள்க எனத் தோழி தலைவியிடங் கூறுங்கால் அவனது அன்பையும், பெருந்தன்மையையும் சுட்டுகிறாள் காதற்கு வித்து அன்பு அல்லவா? காதற்குப் பொருளே அன்பு என்றறிவோம். இரண்டாவது பெருந்தன்மை. கண்டவரைக் காதலிக்கும் மரபன்று உயர்ந்தோருக்கு. அப்படிக் காதற்களத்தில் சறுக்கி விழப் பெருந்தன்மை ஒரு போதும் இடம்கொடாது.

நண்டின் செயலைச் சுட்டி 'இது அதன் நல்வினை' எனக் கூறுவது உவமை. அதன் விளக்கம்—'நாமும் நல்வினையில் ஈடுபடின், காதல் பெற்று, கவினுறு இல்வாழ்வை எய்தலாம், ஆனால் தற்போதோ அணுக இயலவில்லையே! நாம் சேர்ந்த பின்னரே நல்வினை நம்மை எய்தும்'— என்பதாம்.

மணற்குன்றில் மறைவது மட்டுமல்ல தோழியின் கடமை. காதல் நிறைந்த இரண்டு உள்ளங்களைச் சேர்ப்பதும், அவர்கள் கலந்து வாழ்வதைக் கண்டு, தான் களிப்பதும் ஆகும் தோழி அறிவற்றவளாயிருப்பின் நிகழ்வது என்ன? சற்றே நினைமின்!

பூட்டிய தேரொடு புறமிடுவான் கோமான்! புன்முறுவல் பூக்காது; புலம்பல்தான் பூக்கும்! களிப்பே இராது கவலையே எழும்! இன்னிசை இராது; புலப்பலே எஞ்சும்! இத்தகு துன்பச் சூழலினின்று அவ்விருவரையும் மீட்டவள் தோழியே!

அவர்களுக்குத் தைரியம் அதுதான்!

5-ம் பக்கத் தொடர்ச்சி

எவன் எவன் என்ன என்ன விதமான செல்வாக்குள்ளவன், எவனைக்கொண்டு யாரை வசப்படுத்தமுடியும், யார் யாருக்கு என்னவிதமான எலும்புத் துண்டு போட்டு இழுக்க வேண்டும், என்கிறதெல்லாம் காமராசருக்குத் தலைகீழ்ப்பாடம்! அதோடு, அத்தனை இடத்திலேயும் இருக்கிறவன் எல்லாரும் காமராசர் மூலமாக லைசென்சோ, பெர்மிட்டோ, உத்தியோகமோ, ரொக்கமோ வாங்கினவன்தான்! அதனாலே, காமராசரை மீறி பெரிய புள்ளியாயிருக்கிறவன் ஒருத்தனும் போகமாட்டான்! பெரிய புள்ளிகளை மீறி கிராமத்துக்காரன் ஒருத்தனும் போகமாட்டான்—போகமுடியாது! அப்படி எவனாவது போனான் என்று தெரிந்ததோ அத்தோடு கழுதை தொலைந்தான்!"

"ஆமாய்யா ஒருத்தன் இரண்டு பேர் என்றால், கெடுபிடி செய்து மடக்கலாம். நாளைக்குத் தேர்தல் நேரத்திலே அண்ணாத்துரை நெடுஞ்செழியன் கருணாநிதி கண்ணதாசன் என்று பெரிய பெரிய பேச்சாளர்கள் வந்து, கிராமங்களில் கூட்டங்களைக் கூட்டி வைத்துக்கொண்டு 16 வருஷமா காங்கிரசு ஆட்சியிலே என்ன கிடைத்தது? என்று, அடுக்கடுக்கா வர்ணிக்க ஆரம்பித்து, ஒரே நாளையிலே ஜனங்கள் மனது மாறிப் போனால் என்ன செய்வது?

மனது மாறுவதா? பிரசங்கம் கேட்டாமாறும்? ஐயோ! ஐயோ! அடுப்பங்கரையே தஞ்சம் என்று இருக்கிற பெண்களின் ஓட்டுகள் சரிபாதி! அந்தப் பெண்களுக்கு என்ன தெரியும்! எந்தக் கூட்டத்திற்குப் போகப் போகிறாள்? கையிலே நான்கு ரூபாயைக் கொடுத்து, "உன் புருஷனையும் நீதான் கவனித்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லிவிட்டால் போதுமே! அதிலும், காத்தாயி, கருப்பாயி, மாரியாயி சத்தியமா, வாங்கின பணத்திற்குத் துரோகம் செய்யாதே என்று சொல்லிவிட்டால் ஒரு ஓட்டு மாறிப் போகாது தெரியுமா? இங்கே இருக்கிற தரித்திரமும் அறியாமையும் நமக்குப் பக்கபலமாத்தானே இருக்கின்றன? பிரசங்கம் செய்வதுதான் என்ன? நம்மிடம் ஆளாயில்லை? ஈரோட்டு நாய்க்கர், வின்சண்ட், ஸ்பென்சர், அலங்காரநாயகி, தங்கம்மா, தனலட்சுமி எத்தனை பேர் வேண்டும்? தூசியாக்கிவிடமாட்டோமா? அதோடு, இந்த தேர்தலிலே தமிழ்நாட்டுக்குமட்டும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டம் இருக்கிறதாம்!

"ஆமாம் 200 தொகுதிக்கு 1 கோடி செலவு என்றால், ஒரு தொகுதிக்கு 50 ஆயிரம்தானே வரும். ஓட்டு ஒன்றுக்கு ரூபாய் ஒன்று கொடுக்கவே போதாதே! எப்படி நாலு ஐந்து கொடுப்பது?"

"அப்படிக் கேளுங்கள்: 200 தொகுதியிருந்தால் இருநூறிலுமா செலவு ஏற்படும்? நமக்கு வேண்டியது 150 எம். எல். ஏக்கள்! இந்த 150-ல் 50 பேர் சொந்தச் செலவிலும், சொந்த செல்வாக்கிலும் ஜெயித்துவிடுவார்கள்! மீதியுள்ள 100-ல், 50 பேருக்கு மொத்தச் செலவில் அரை, முக்கால் கொடுத்தால் போதும் பாக்கியை அவர்களே ஈடு செய்ய முடியும்! கடைசியாக 50 பேருக்குத்தான் பெருஞ் செலவு செய்ய வேண்டியிருக்கும் புரிகிறதா?"

'புரிகிறது! புரிகிறது!! இங்குள்ள அறியாமையும் வறுமையும் இருக்கும் வரை காங்கிரசு அசையாது. காங்கிரசு இருக்கும் வரை அறியாமையும் வறுமையும் அசையாது மண்ணுக்கு மரமும் மரத்திற்கு மண்ணும் ஆதாரமாகஇருப்பதுபோல இவைகள் இருக்கின்றன. வாழ்க, வறுமை அறியாமை!

அடடே! விழுப்புரம் வந்துவிட்டதே பேச்சு முறுக்கில் கவனிக்கவில்லையே! சரி இறங்குங்கள்."

வெண்பாப் போட்டி-8.

★

'பட்' டென்று தொடங்கிப்
'படார்' என்று முடிக்க

இறுதி நாள் 23-10-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

இலக்கியச் சுவை

ருக்மணி இராமநாதன், பி.எஸ்ஸி.

10. வீரச் சுவை

வீர உணர்ச்சி என்பது விழைந்தபொழுது வரக்கூடிய நடிப்புணர்ச்சியாகாது. உடலிலே வலிமை இல்லாவிட்டாலும் உள்ளத்திலே வலிமை (உண்மை) இருக்குமானால் வீர உணர்வு வெளிப்பட்டே தீரும்.

தன் நிலையினின்று தாழ்த்தப் படுகிறபொழுது தன்மானமுடையவருக்கு வீரம் பொங்கும். அதே போல் தன்நிலைக்குத் தகாத கீழான செயலைச் செய்யுமாறு நேரும் பொழுது வீர உணர்வு எழும் இஃது இயல்பே.

கன்னித்தமிழ் கொஞ்சும் காப்பியமாம் சிலம்பில் கண்ணகியை வீரச்செல்வி என்று அழைக்கக் கூடிய அளவு அந் நல்லாளிடம் வீரம் காணப்படுகிறது. கொண்ட கணவனை மாதவியால் இழந்து மனம் நொந்து வாடுகின்ற நிலை கண்ணகிக்கு. கண்ணகியின் பார்ப்பனத் தோழி தேவந்தியோ கண்ணகியின் கவலையைப் போக்க வழி ஒன்று சொல்கிறாள். பிரிந்துவிட்டனும் கணவரைப் பெற சோம குண்டம், சூரியகுண்டம் ஆகிய பொய்களில் மூழ்கினால் நும் கணவர் வந்து விடுவார் என்று தேவந்தி கூறுகிறாள்.

கணவர் தேவைதான், அதற்காகக் கண்மூடிப் பழக்கத்திற்கு அடிமையல்ல நான் என்பதைக் கண்ணகி உணர்த்த "பீடன்று" என்று மறுத்துரைக்கும் வீர உணர்வு போற்றத்தக்கது.

தொடக்கத்தே ஒரு சொல் கூறிய ஏந்திழையின் வீர உணர்வு கணவனை அன்புடன் கண்டிக்கும் இடத்தில் நன்கு தெளிவாகின்றது.

மணந்தான் - மகிழ்ந்தனர் - மகவு இல்லையாக மனநோய் - மாதவிபாற் பிரிவு - மகளாய் மணிமேகலை - மறுபடியும் பிரிவு - கண்ணகியை அடைந்தான் - மதுரைச் செலவு - அடைக்கலத்தில் தன் தவறுகளைக் கூறி அழுகிறான். கண்ணகிக்குக் கோவலனை அறியக் கூடிய வாய்ப்புகள் குறைவுதான் என்றாலும் அறிவு சான்றவள் என்பதால் இடம் நோக்கி மெல்ல கோவலனைக் கண்டிக்க முற்படுகிறாள்.

தான் செய்தவையெல்லாம் தவறு ஆனால் நீ உயர்ந்தவள் என்று பணிவுரை புகன்ற கோவலனை "போற்றா வொழுக்கம் புரிந்தீர்" என்று அவன் சென்றவழி முறையற்றது என்பதைக் கண்ணகி கூறும் இடத்தால் அவள் வீர உணர்வின் விளை நிலம் என்பது புலனாகும்.

சிலம்பு விற்கச் சென்றவன் கொலைப்பட்டு களத்திடையே பிணமாகக் கிடக்கிறான். மணந்து கொண்டவள் மனம் நொந்து மயங்கி விழவில்லை. துன்பத்தின் எல்லையில் துவண்டு விடுவது எளிது; ஆனால் தாங்கிப் பிடித்துக் கொண்டு தவற்றுக்குரிய தருக்கரைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன் என்று செயலாற்றல் வீரத்தாயாலன்றி வேறெவரால் முடியும்? தவற்றுக்குரியவன் மன்னவனே அன்றி வேறு யார்? அதற்காக நான் அழுவதா? என்று பன்முறை பகர்கின்றாள்.

"மன்பதை அலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான்
அவலங்கொண் டழிவலோ?"
"மறனொடு திரியும் கோல்
மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய்யான்
அவலங்கொண் டழிவலோ?"

வாயிலோனை வழிக் கொண்டு காவலனைக் கண்டுரையாடிக் கள்வனோ என் கணவன் என வாதிடுவது வீரஉணர்வன்றி வேறென்ன? கள்வனைக் கோறல் கடுங்கோலாகாது என்று கவன்றுரைத்த காவலனைக் காற்சிலம்புண்மையறிய மணியுடை அரியை மணிமுடி தெறிக்க உடைத்து மன்னவன் மண்மிசை வீழச் செய்த வெற்றிச் செல்வி கண்ணகி என்பதில் வியப்பில்லை.

"நற்றிறம் படராக்
கொற்கை வேந்தே
என்காற் சிலம்பு
மணியுடை அரியே"

வீழ்ந்துவிட்ட குடையும் - வளைந்துவிட்ட செங்கோலும் கோவலனுக்கு விலையாகாது என்பது கண்ணகி கருத்துப் போலும். மீண்டும் வீரத்தாயின் உணர்ச்சி பொங்கி எழுகின்றது. இழந்துவிட்ட பொருளின் எய்தலாகாத அருமை பெற்றிருந்தவருக்கன்றிப் பிறருக்கா தெரியும்? மணந்த கணவனைப் பிணமாக்கித்தந்த மாடமதுரையின் கலைச்சிறப்பா கண்ணகிக்குப் புலனாகும்? கோவலனின் கலையுணர்ச்சி கொலையில் முடியும் என்று எண்ணியிருப்பாள்.

அடிபட்ட வேங்கை ஆர்த்தெழுவது போல், மதுரையை அடியோடு எரித்து மண்ணாக்குவேன் என்று வெந்த உள்ளத்தோடு வேதனைக் குரலால் வஞ்சினம் கூறினாள்.

"பட்டாங் கியானுமோர்
பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ
டொழிப்பேன் மதுரையுமென்"

மேற்றிசை வாயிலில் வறியவளாய்த் திரும்புவோம் என்ற எண்ணம் கண்ணகிக்குப் புறப்படுகையில் புலனாகியிருக்குமா? 'எழுக' என்று கூறிய கணவனைத் துணையாகக் கொண்டு, பெற்றோர் மற்றோரிடம் கூறாது மாட மதுரையில் கோவலனைப் பிணமாக்கியப் பின்னர் துணையின்றித் துயருறும் அவளுக்கு வீர உணர்வு குறைந்ததா? வேதனையின் பிறப்பிடமாக வளர்ந்துவிட்ட கண்ணகிக்கு வீர உணர்வு அவ்வப்பொழுது அவளையுமறியாமல் எழுந்து செயலாற்றுகின்றது.

கணவனை இழந்து காடு-மேடு கிடங்கு எதுவென்று அறியும் உணர்வையும் இழந்துவிட்டாள். இழந்ததைப் பெற முயற்சி வேண்டும், இயலாத ஒன்றினைப் பெற முயலுதல் அறிவாகாது. கண்ணகிக்கும் தெரிந்ததுதான். வீர உணர்வு படைத்த அறச் செல்வி கண்ணகி கணவனை இழந்து உயிர் வாழ்ந்திருக்கமாட்டாள். கணவன் கள்வனல்லன் என்று காட்டி, நேர்மையின் மறு உருவம்-மாசற்ற மாணிக்கம் என்பதை மன்பதையறிய கண்ணகி வாழ்ந்தாளே அன்றி உடலை வளர்த்து வாழ்வதற்கல்ல. டென்னிசன் என்பார் கூறுகிறார்:

"My strength is the strength
of ten because my heart
is pure"

உண்மையும் நேர்மையும் உடைய இதயம் படைத்தோர் தீமையை எதிர்க்கும் ஆற்றலை எப்பொழுதும் பெறுகிறார்கள். நேர்மையான இதயமுடைய ஒருவர் பத்து மடங்கு வலிமையைப் பெற முடிகின்றது என்பது உலகியல் உண்மை. அத்தகைய அளவிலாத ஆற்றலை ஒரு பெண் அறச் செல்வி கண்ணகி பெற்றிருந்தமையால் கொற்றவனைத் திருத்தவும்-கொடுமையை அழிக்கவும் முடிந்தது.

கண்ணகி - வீர உணர்ச்சியின் பிறப்பிடம் என்பது வெறும் சொல்லாகாது.

அடுத்த கிழமை:
"கவிதைக் கலை"

பிரகதி ஆர்ட் புரடக்ஷன்சார் தயாரிக்கும் அன்புமகளில் இரண்டு காட்சிகள். படம் பொங்கலன்று வெளியிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கண்ணதாசன் கவிதைகள் படத்தில் இடம் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. திரைக் கதை வசனம்; முரசொலி மாறன்.

செய்திச் சுழல்

கடவுளைக் காப்பாற்றப் பக்தவத்சலம் புறப்பட்டுவிட்டார்.

சிலநாட்களுக்குமுன் பெரியார், கோவில் பணத்தை ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பயன் படுத்தினால், அயல் நாட்டில் கடன் வாங்கத் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்தார் அல்லவா? அதற்கு இப்போது அமைச்சர் பக்தவத்சலம் மறுப்புக் கூறியிருக்கிறார்.

கோயில் பணத்தை வேறு காரியங்களுக்குப் பயன் படுத்த இடமில்லையாம். கோயில்களைப் பராமரிக்கவே அவை போதவில்லையாம். இடிந்து போன கோயில்களையெல்லாம் புதுப்பிக்க வேண்டுமாம். கோயிலுக்கு பக்தர்கள் அதிகமாக வரும்படி செய்ய வழி வகுக்க வேண்டுமாம். பல கோயில்கள் பராமரிப்புக்குப் பணமில்லாமல் சீர்குலைந்து வருகின்றனவாம். இந்தக் கேடுகளையெல்லாம் போக்கி, கோயில்களுக்காக நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிடங்கள் கட்டி, தூரந்தொலைவில் உள்ளவர்களும் கோயிலுக்கு வருமாறு வசதிப் படுத்த வேண்டுமாம். இதனால் கோயில் வருவாயும் கூடுவதற்கு வாய்ப்பிருக்கிறதாம்.

திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களுக்கு வசதி செய்து கொடுத்ததன் மூலம் நான்கு மடங்கு அதிகமாக வசூல் செய்திருக்கிறதாம். இதே முறையை எங்கும் கொண்டுவர வேண்டுமாம்.

இது தவிர, கோயில்களைக் காப்பாற்றவும், பக்தர்களைக் கோயிலுக்கு வரச் செய்யவும் ஓர் இயக்கமே நடத்த வேண்டுமாம்.

கள்ளனுக்கு நாட்டம் கன்னக் கோலிலே என்பது போல், அரசியல் வாதியான பக்தவத்சலத்திற்கு இயக்கம் நடத்துவதிலே நோக்கம் பாய்ந்திருக்கிறது! என்ன பக்தி! இந்தத் தென்னாட்டில் இருக்கின்ற எந்தக் கடவுளாவது இந்த மாதிரி யோசனை செய்ததுண்டா? மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல் என்றபடி இனி நடக்க வேண்டிய யோசனையை பக்தவத்சலம் சொல்லி விட்டார். இனி பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து கோயில்களையும் அவற்றில் உள்ள கடவுள்களையும் பாதுகாக்கவும் பராமரிக்கவும் ஓர் இயக்கம் அல்லது போராட்டமே துவங்கி விடலாம். கடவுள்கள் இதில்கலந்து கொள்ள வேண்டியதில்லை. போராட்டம் முடியும் வரை கல்லாகவே இருந்து பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

தேர்தல் வருகிறது தேர்தல்! தி. மு. க. பலத்தைப் பாரீர்!

1962-ஆம் ஆண்டு நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியத் துணைக்கண்ட முழுவதும் இயங்குகின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் தேர்தல் நடக்கவேண்டிய அந்த ஆண்டை இப்போதே எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டன. தங்கள் தங்கள் நிலையை எண்ணிப் பார்த்துக் கொள்ளவும், உயர்த்திக் கொள்ளவும், அதற்கான வழி வகைகளை ஆராயவும், திட்டம் வகுக்கவும் இப்போதே தொடங்கி விட்டன.

பெரும்பாலான கட்சிகள் காங்கிரசை ஒழிப்பதையே இலட்சியமாகக்கொண்டு இப்போதே ஆரவார முழக்கங்கள் எழுப்பத் தொடங்கி விட்டன.

காங்கிரசை யொழித்துக் கட்டுவதற்கு ஏற்ற சரியான பலம் வாய்ந்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை இப்போது எல்லாக் கட்சிகளும் உணர ஆரம்பித்து விட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தை மூலத்தளமாக வைத்தே காங்கிரசை ஒழித்துக் கட்டவேண்டுமென்று அவை முடிவுக்கு வந்து விட்டன. இன்று பல கட்சித்தலைவர்களும் வெளியிடும் கருத்துக்கள் இந்த எண்ணத்தைத் தான் பிரதிபலிக்கின்றன.

வரும் தேர்தலில் காங்கிரசை யொழிப்பதற்கு, சுதந்திரக் கட்சியை ஆரம்பித்திருக்கும் ஆச்சாரியார் தி. மு. க. வையே முழுதும் நம்பியிருக்கிறார் என்பது அவருடைய திருவனந்தபுரம் பேச்சிலிருந்து புலப்படுகிறது.

அனைத்து இந்தியப் பின் தங்கிய வகுப்பினர் கட்சியின் தலைவர் திரு. ஆர். எஸ். சந்தாபுரி, தி. மு. கழகத்துடனும் பிற கட்சிகளுடனும் சேர்ந்து கூட்டணி அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

சோஷலிஸ்டுக்களும் இந்தக் கருத்தையே தெரிவித்திருக்கின்றனர். கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் எதிர்ப்பு முகாமில் சேரத் தயங்க மாட்டார்களென்று கருதப் படுகிறது. இவ்வாறு தி. மு. கவைத் தலைமையாகவும் மையமாகவும் வைத்துச் செயல் பட்டால்தான், காங்கிரசை அடியோடு வீழ்த்த முடியும் என்று எல்லாக் கட்சிகளும் முடிவுக்கு வந்து விட்டன.

பாவம்! காங்கிரஸ்காரர்களுக்கு இப்பொழுதே உடல் உதறலெடுக்க ஆரம்பித்து விட்டது தேர்தல் வருவதற்குள் எத்தனை தடவை திடீர் மூர்ச்சை போட்டு விழுவார்களோ தெரியவில்லை! 1962-ல் சென்னையைப் பொறுத்தவரை காங்கிரஸ் புதையுண்டு போகும் என்பதற்குரிய அறிகுறிகள் இப்போதே தோன்றஆரம்பித்து விட்டபடியால், அதற்குச் கேது திசை ஏற்பட்டு விட்டது என்று சோதிடர்கள் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்கள சோதிடம் பலிக்காது என்று நினைக்க வேண்டியதுமில்லை. சோதிடர்கள் இப்போது நிச்சயமாக குறி சொல்லலாம்!

அரசாங்கத்தின் ஆதிக்க வெறிக்கு ஆறுபேர் பலி!-நூறுபேர் காயம்!

சீக்கியர்கள் நெடுநாட்களாகத் தனிநாடு கேட்டுக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். தலைவர் தாராசிங் எத்தனையோ இன்னல்களுக்கிடையில், சீக்கிய மக்களுக்கிடையே ஒற்றுமையும் உணர்ச்சியும் நிலவச் செய்து கிளர்ச்சியை விடாமல் செய்து வருகிறார்கள்.

சீக்கியர்களின் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்குவதற்காக ஆயிரக் கணக்கான வீரர்களை அரசாங்கம் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. அப்படிவைக்கப்பட்ட சிறைகளிலே 'பதிந்தா' என்ற இடத்தில் உள்ள சிறையும் ஒன்று. அந்தச் சிறைச் சாலையில் இருந்த உரிமைப் போர் வீரர்கள் கேட்ட சில கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கச் சிறையதிகாரிகள் மறுத்து விட்டார்கள். அதற்காக அவ்வீரர்கள் சாப்பிட மறுத்ததோடு, தங்களை அடைத்து வைத்த அறைகளுக்குள்ளே நுழையவும் மறுத்துவிட்டார்கள்.

போலீசார் அவர்களைக் கட்டாயப் படுத்தி அறைகளுக்குள்ளே தள்ளி அடைத்ததால், உணர்ச்சியுள்ள இளைஞர்கள் சிலர் திருப்பித் தாக்கியிருக்கிறார்கள். இதனால் பெரும் புரட்சி ஏற்பட்டது. அந்தப் புரட்சியை அடக்குவதற்காகப் போலீசார் துப்பாக்கியால் சுட்டார்களாம், இந்தப் படுபாதச் செயலால் நாட்டுப் பற்றும் நல்லுணர்வும் வீரமும் கொண்ட ஆறு பேர் சாவுலகம் சென்று விட்டார்கள். நூறுபேருக்கு மேல் காயம்பட்டுத் தப்பியிருக்கிறார்கள்.

மக்களாட்சி நடத்துவதாக வாய்த் தம் பட்டம் அடிக்கும் இந்த அரசாங்கத்தார், மக்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக—மக்கள் உணர்ச்சியை மதியாததோடு—அந்த உணர்ச்சியின் காரணமாகக் கிளர்ச்சி செய்யப் புறப்பட்ட ஆறு வீரர்களின் உயிரைப் பலிவாங்கி விட்டனர். இந்த வெறியாட்சி நெடு நாளைக்கு நிலைக்காதென்பதை என்றுதான் இந்த அரசாங்கம் உணருமோ, தெரியவில்லை!

இன்பக் கனவுகள் எத்தனை நீ கண்டாயோ?

பதினெட்டு வயதுப் பெண்! அவள் பெயர் அலர்மேலு அம்மாளாம். சிவகங்கை சர்வே அலுவலகத்தில் வேலை பார்க்கும் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மனைவியாம்!

புதுப் பெண்! இல்லறத்தின் இன்பத்தை அடைய ஆவலோடு திருமணம் புரிந்து கணவனோடு கூடி வாழ வந்தவள்.

தாய்தந்தையர் என்ன நிலையில், எப்படிப்பட்ட வறுமையில் வாழ்பவர்களோ? தெரியவில்லை.

அவள் கணவன் தீபாவளிக்குச் சீர் வரிசை கொண்டு வருமாறு கூறினான். வழி வகையிருந்தாலல்லவா அவள் கொண்டு வர முடியும்? கணவனோ தன் மனைவியின் நிலையை உணர்ந்துபார்த்தவனாகத் தெரியவில்லை.

தீபாவளிக்குச் சீர் வரிசை கொண்டுவந்தால்தான் ஆச்சு என்று வற்புறுத்தியிருக்கிறான் அந்தக் கொடியவன். அவள் கண் கலங்க அவன் என்னென்னசொன்னானோ? மனந்துடிக்க எப்படியெப்படி வைதானோ? கன்னம் வீங்க எவ்வளவு பலமாக அறைந்தானோ? இன்னும் என்னென்ன கொடுமை புரிந்தானோ தெரியவில்லை.

கணவனின் கொடுமை தாங்காத அந்தப் பெண், தன் சேலையின் மீது மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக் கொண்டு செத்து விட்டாளாம்.

ஐயோ! அலர்மேலு!

பருவத்தின் எல்லையில் நின்ற பச்சைத் தளிர்க்கொடியே!

எத்தனை யார்வத்தோடு திருமணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக் குவந்தாயோ?

எத்தனை இன்பக் கனவுகள் நீ கண்டிருப்பாயோ?

எத்தனை சினிமாக்களைப் பார்த்து அதில் வரும் நாயக நாயகிகளின் அன்புரையாடல்களைக் கேட்டு அப்படியெல்லாம் உன் கணவனுடன் இன்பங்காண வேண்டுமென்று எண்ணியிருந்தாயோ?

கடைசியில் எத்தனை வேதனைப் பட்டு எவ்வளவு தூரம் மனமுடைந்து - புண்பட்டுச் செத்தாயோ?

அலர்மேலு ஒருத்தி மட்டுமல்ல!- இந்தத் தமிழ்நாடு முழுவதும் இப்படி அல்லலிலே மூழ்கி துன்பமே துணையாக, துயரமே உருவாக நடைப் பிணங்களாக வாழுகின்ற நங்கையர் எத்தனையெத்தனையோ!

ஏழைப் பெண்களை இதயமுடையச் செய்து செத்தொழியச் செய்கின்ற ஆடவர்களை உருவாக்கியது சாதி மதங்களும் சமுதாயத்தில் அவற்றால் ஏற்பட்ட பழக்க வழக்கங்களும் தான்!

பழக்க வழக்கங்களுக்கு மக்கள் அடிமைப் பட்டதன் காரணமாகத்தான் இப்படிப் பட்ட கொடுமைகள் - பாதகங்கள் அன்றாடம் நிகழ்கின்றன. சாதியும் மதமும் ஒழிந்தால் ஒழிய இப்படிப் பட்ட சாவுகள் ஒழியா!

போராடு!

போரா டப்பா போராடு
புல்லர் ஆட்சியில் போராடு
கூட்டம் கூடினால் போதாது
குறைகளைச் சொன்னால் போதாது

தீர்மா னித்தால் போதாது
திட்டம் போட்டால் போதாது
மனுக் கொடுத்தால் போதாது
மண்டி யிட்டால் போதாது (போ

கஞ்சி வேண்டும் என்றாலும்
கைத்தொழில் வேண்டும் என்றாலும்
இஞ்சி வேண்டும் என்றாலும்
ஏலம் வேண்டும் என்றாலும் (போ
பெயரை மாற்ற வேண்டுமா
பெரிய துறைமுகம் வேண்டுமா
இரயில்வே பாதை வேண்டுமா
எதற்கும் உரிமை வேண்டுமா (போ

அந்நியன் கையில் அதிகாரம்
அதற்குத் தகுந்த சதிகாரர்
என்ன செய்ய முடியுமப்பா
எடுத்த தற்கெல்லாம் போரப்பா (போ

அருப்புக்கோட்டை. எம். எஸ் இராமசாமி.

அரசியல் அரங்கம்

"வம்பன்" பதிலளிக்கிருர்

[அரசியல் அரங்கத்தில் அரசியல் குறித்த கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் அஞ்சலட்டைகளை அனுப்ப வேண்டுகிறேம். உயர்திரு **வம்பன்**, அரசியல் அரங்கம், தென்றல், சென்னை-6.]

சென்னைக் கோட்டையில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் குரங்குகள் போய் அட்டகாசம் செய்கின்றனவாமே. குரங்குகள் அங்கு போகக் காரணமென்ன ?

என். சுப்பிரமணியம், போளூர்.

இராம ராவண யுத்தத்தின்போது, அவைகளின் முன்னேர் வகித்திருந்த பதவிகளை இப்போது கோட்டை வாசிகள் வகிக்கிருர்களல்லவா ? அந்தப் பதவிகள் வாரிசுக் கிரமப்படி கிடைக்க வில்லையே என்ற வயிற்றெரிச்சல் காரணமாக இருக்கலாம்.

★

ஐ. நா. வில் நேருவின் திர்மானம் தோல்வியடைந்துவிட்டதே இதைக் குறித்து அவர் என்ன நினைப்பார் ?

— வி. ராமசாமி, கோவை.

நினைக்க என்ன இருக்கிறது ? அவருக்கு வேண்டியது வெற்று விளம்பரம் ! அது கிடைத்துவிட்டது. எனவே, மகிழ்ச்சியாகத்தான் இருப்பார் !

★

பல்வேறு நாடுகளையும் அவற்றின் ஆட்சி முறைகளையும் சுற்றிப் பார்க்க எனக்கு ஆசையாக இருக்கிறது. கையிலோ பணம் இல்லை. இதற்கு ஏதாவது வழி சொல்லுவீரா ? வம்பரே !

— ஆர். கண்ணப்பன்
அதிராம்பட்டினம்.

1962 தேர்தலில் அலகாபாத் மக்கள் சபைத் தொகுதியில் அஞ்சாமல் ஒரு வேட்பாளர் விண்ணப்பத்தைப் போட்டு, டில்லி முதன் மந்திரி பதவியைப் பிடித்துவிடுங்கள். பிறகு ஊரார் செலவில் நாடோடியாக இருக்கலாம் !

★

ஐயா, வம்பரே ! குற்றம்சாட்டியவரையே கைது செய்யும் அரசாங்கம் எந்த நாட்டில் நடக்கிறது ?

— எஸ். பி. அன்பழகன்
இராயபுரம்.

கேரளத்தில் நடக்கிறது, அன்பரே!

★

முதன் முதலில் வெள்ளையரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியவன் கட்டடபொம்மனு? புலித்தேவனு?

—இராம மணிமேகலை தேவக் கோட்டை.

புலித்தேவன் என்ற பேருடையவன் எவனுமில்லை. கட்டப்பொம்மன் முதல்வன் அல்ல. நெற்கட்டஞ் சேவல் பாளையக்காரன், பூலி. சிவஞானத் தேவன் என்பவனே 1780-ம் ஆண்டு வாக்கில் தனிப் பெரும் வீரனுகப் போர்க்கொடி உயர்த்தினன்.

★

ஆதித்தனர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிருர்?

—பெ. தமிழரசன் திருச்சி.

பலிஞ் சடுகுடு ஆடிக்கொண்டிருக்கிருராம் !

★

பொருளாதார வீக்கம் என்பதென்ன?

—வெ. கலையரசி கொமுடி.

அரசாங்கத்தின் Dis honoured Cheques அதிகமாகிவிட்டது அல்லது அரசாங்கம் வெடிக்க ஆரம்பித்து விட்டது என்றுபொருள்.

★

காமராசர் இளம வயதில் என்ன தொழில் செய்து கொண்டிருந்தார்?

—சு, மன்னர், சீரங்கம்.

விருதுநகர் தெப்பக் குளத்தைச் சுற்றிக்கொண்டிருந்தார்.

★

வெளிநாட்டு தூதரகங்கள் இருப்பதால் என்ன இலாபம்?

—வி. மதிவாணன் அம்பத்தூர்.

சமூக பொருளாதாரத் தொடர்புடைய வெளி நாடுகளில் தூதரகம் இருந்தால், அவற்றைப் பாதுகாப்பதற்குப் பயன்படும். எந்தத் தொடர்பும் இல்லாத நாடுகளில் தூதரகம் இருந்தால், கட்சிக்காரர்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும் பதவிதரப் பயன்படும்.

★

சாதி, குலம், சமூகம், சமுதாயம், இனம், ஆகிய சொற்கள் ஒரே அருத்தம் கொண்டவைகள் தானு?'

—வீ. தமிழ்த்தாசன் திருவள்ளூர்

சாதி என்பது மதவாதிகளின் நஞ்சு மூளையில் தோன்றிய கொடுங் கற்பனை. குலம் என்பது மிக நெருங்கிய சுற்றத்தார் கூட்டத்தைக் குறிக்கும். அத்தகைய குலம் பலவற்றைக் கொண்டது சமூகம். சமூகம் பல சேர்ந்தது சமுதாயமாகும். இனம் என்பதும் சமுதாயம் என்பதும் ஒன்றே.

★

சென்னை ராஜ்யத்தை 'தமிழ்நாடு' என்று மாற்றுவதற்கு ஏராளமான செலவும், பெரிய முயற்சியும், தேவை இருக்குமோ? அப்படி இல்லையென்ருல் மந்திரிகள் மறுக்கின்ருர்களே ஏன்?

—மா. திராவிடச் செல்வம். கடலூர்.

ஒரே ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டால் மறுநாளே தமிழ்நாடு தோன்றிவிடும். இதற்குக்கூட மந்திரிகள் ஏன் மறுக்கிருர்கள் என்ருல், இவர்கள், பேரால் மந்திரிகளே தவிர உண்மையில் மந்திரிகள் அல்லர்-வடநாட்டு அடிமைகள் ! இந்த அடிமைகளை இவர்களுடைய எஜமானர்கள் அடக்கி வைக்கிருர்கள். அடக்கு முறையை வெளியே சொல்ல முடியாமல், கருவாட்டைத் தவறவிட்ட பார்ப்பனத்திபோல 'கம்' என்று இருக்கிருர்கள்.

★

காமராசருக்கும், சவகர்லால் நேருவுச்கும் இடையில் மிக நெருங்கிய நட்பு உண்டென்று சொல்கிருர்களே, அப்படி இருந்தும் தமிழ்நாட்டுக்கு 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டை நாமம் அடிக்கப்பட்டது ஏன்?

—சி. நடராசன் விருதுநகர்.

நட்பு இருப்பது உண்மைதான். ஆனுல், அந்த நட்பு வேட்டை நாய்க்கும் வேடனுக்கும் இடையிலிருக்கும் நட்புப் போன்றது. வேட்டை நாய்கள், தன்னை வளர்க்கும் வேடனுக்காக நாய்க் குலத்தையே அழித்துவிடவும் தயங்காது. தமிழ்நாட்டின் கதியும் இதுதான்.

★

காங்கிரஸ்காரர்களின் வீட்டு மாடிகளில் பின்னி மில் ஜாக்கட்டுகளும் வாயல் சேலைகளும் கொடியில் காய்ந்து கொண்டிருக்கின்றனவே, ஏன்?

—லெ. கண்ணப்பன் நாட்டரசன் கோட்டை.

இதில் அதிசயம் என்ன இருக்கிறது ? நெசவாலைச் சொந்தக்காரர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள் தானே ! பகலில் கதர் வேட்டியும், இரவில் மெல்லிய வாயல் உடைகளும் அணிகின்ற காங்கிரசுத் தலைவர்களை நீர் காணவில்லை போலும் ! வீட்டிலுள்ள திண்டு, தலையணை, மெத்தை, நிலைகதவு, சாளரம் இவைகளுக்குப் போர்த்தி இருக்கும் துணிகள் அத்தனையும் மில்தான் தோழரே ! கைத்தறி கூட இருப்பதில்லை ! பொதுக்கூட்டங்களுக்கு வரும்போதுதான் கதர் வேடம் தரித்து வருகிருர்கள் !

★

தமிழரசுக் கழகப் பத்திரிகைகளில் பக்கத்துக்குப் பக்கம் கொட்டை கொட்டையாக தி. மு. க. என்ற எழுத்துக்களே காணப்படுகின்றன. தி. மு. க. வை விட்டால் அவைகளுக்கு வேறு விஷயம் கிடையாதா?

—பா. மணிமாறன் சென்னை-1.

ஏன் கிடையாது ? ம. பொ. சியின் மீசையைப்பற்றி, அவருடைய சீடகோடிகள் எழுதுவார்களே !

★

வம்பரே, தெனறல் ஒரு பாட்டுப் புத்தகம் மாதிரியிருக்கிறதென்று தமிழ்வாணன் கூறுகிருரே! இதற்கு என்ன சொல்லுகிறீர்?

—கே. வேலுமணி சென்னை-24

அரண்மனை பார்த்த படுவீணன்கதை தெரியுமா உமக்கு ?- அரசனுடைய அரண்மனையைப்பற்றி பல பேர் புகழ்ந்து கூறக் கேட்டிருந்தான் படுவீணன். படுவீணனுக்கு அரண்மனை பார்க்க வேண்டும் என்கிற ஆசை உண்டாயிற்று. அரண்மனைவாசலுக்குப் போனுன். ஆனுல். உள்ளே போகும் தகுதி படுவீணனுக்குக் கிடையாது. காவலாளர் தடுத்துவிட்டனர். பேசாமல் திரும்பி வந்நான். அதன் பிறகு, அவன் சொன்னுன் மற்றவர்களுக்கு:—

அரண்மனை என்ருல் என்ன தெரியுமா ? உயர்ந்த பெரிய சுவர் அந்தச் சுவரில் பெரிய வாசல்மாதிரி வைத்து இரும்பினுல் பெரிய கதவு செய்து வைத்திருக்கிருர்கள். அந்தக் கதவுகள் மூடுவதற்குப் பயன்படாதென்று தெரிகிறது. ஆகவே அங்கே 4 பேர் ஆயுத பாணிகளாக காவலுக்கு நிற்கிருர்கள். இதுதான் அரண்மனை ! இதைப் போய் பெருமையாய்ப் பேசுகிருர்கள் மூடர்கள் ! என்ருனும் படுவீணன்.

இந்தக் கதை தமிழ்வாணனின் தென்றல் விமர்சனத்தை நினைவுபடுத்துகிறதா இல்லையா ? தென்றலில் வரும் வெண்பாப்போட்டி வெளிப்பக்கத்தில் இருக்கும். அதைப் பார்த்துவிட்டு தென்றல் என்ருல் இவ்வளவுதான் ! அது ஒரு பாட்டுப் புத்தகம் என்று எழுதியிருப்பார் ! பாவம் ! அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான் !

★

தி. மு. க. துணைச் செயலாளர்களாக ஐந்து பேர்கள் நியமிக்கப் பட்டிருக்கிருர்களே, அண்ணு ஒருவரால் நிர்வகிக்க முடியாதா?

—R. M. முத்து வெற்றியூர்.

நிருவகிக்கமுடியும் ! மற்றவர்களுக்கும் பயிற்சி தர வேண்டாமா ?

★

அரசியல் வம்பரே! இந்திய இராணுவ மந்திரி கிருஷ்ணமேனனின், சுருக்குத் தட்டெழுத்தியாக (Steno Grapher) ஒரு சீனுக்காரி இருக்கிருளாமே. மலையாளத்து மங்கையர் பலர் உத்தியோகம் புரியக் கூடிய தகுதிபெற்றிருந்தும் சீனுக்காரியை நியமித்திருப்பதன் மர்மம் என்ன?

—சி. நாகராசன், திருப்பூர்.

செஞ்சீனுவின் நட்புக்கு அச்சாரமாக இருக்கட்டும் என்று கருதி இருப்பர். அல்லது சீனுக்காரியின் பேராற்றல் சேர நாட்டு மங்கையர்க்கு இராதென்று கருதியிருப்பார். அல்லது பகையாளி குடியை உறவாடிக் கெடு என்பது போல திராவிடத்தின் பிறவிப் பகைஞர்களான வடவரைச் சீனர்களைக்கொண்டு தான் பழிவாங்க வேண்டும் என்று கருதிவிட்டாரோ என்னவோ ! அவரும் திராவிடர்தானே !

★

ஐயா வம்பரே, அரசியல் கட்சி ஒன்றிலிருந்து மற்றென்றுக்கு மாறுபவர்கள் திருந்தி மாறுகிருர்களா? அல்லது ஏதேனும் திட்டமிட்டு மாறுகிருர்களா?

—க. வேலப்பன், சிதம்பரம்.

திட்டம்தானய்யா திட்டந்தான் ! வயிற்றுத் திட்டம் !! அதுதான் பெரும்பாலோர்க்கு முக்கியம் ! காமராசர் சொல்லவில்லையா ! சோறுதான் முக்கியம் என்று !

★

மைனரிட்டியாக உள்ள ஒரு கட்சி ஆட்சிக்குவர வேண்டுமானுல் எந்த முறையைக் கைப்பற்ற வேண்டும்?

—மு. சின்னதம்பி, செங்கற்பட்டு

முதலில் நாட்டிலிருக்கும் இரும்புப் பெட்டிகள், பண மூட்டைகள், மத வெறியர்கள், அத்தனை பேரையும் ஆசை வார்த்தை சொல்லி, வலையில் பிடிக்கவேண்டும், மற்றவை தானுகவே நடக்கும். இன்றைய தமிழ்நாட்டுக் காங்கிரசு சிறுபான்மை தானே ! அது அடிக்கிற கூத்தைப் பாருங்கள் எல்லாம் விளங்கும் !

★

ஓய் வம்பரே, அரசியல் என்ருலே அயோச்கியர்களின் தொழில் என்கிருர்களே இதை நீர் ஒப்புக் கொள்கிறீரா?

—மதி. முல்லை, தூத்துக்குடி.

உம்முடைய தாய்க்கும் தந்தைக்கும் ஏற்பட்ட காம வெறியின் சின்னம்தான் நீர் என்கிறேன் நான். மறுக்கமுடியுமா? அதுபோல்தான் !

★

இறக்குமதிக் கட்டுப்பாட்டில் அரசாங்கம் இவ்வளவு கடுமையைய அனுசரிக்க வேண்டியது அவசியம் தானு?

—சா. குருசாமி, திண்டுக்கல்.

வேறு வழியிருந்தால் நீர் சொல்லலாமே ! லைசென்சும் பெர்மிட்டும் இல்லையானுல் தன்னலப் புலிகளின் கூட்டமான காங்கிரசை ஒருநாள் கூடக் கட்டிக்காக்க முடியாதே.

★

பச்சைத்தமிழர் ஆட்சியிலே பள்ளிகள் பல நிறுவியதாக பகர்கிருர்களே சிலர், இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

—K. கண்ணபிரான், மன்னன் பந்தல்.

பள்ளிகள் மட்டுமா ? நாட்டில் குழந்தைகள் பிறப்பதும் வளர்வதும்கூட அவர் ஆட்சியின் மகிமைதான் என்று சொன்னுலும் சொல்வார்கள் !

★

தாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சற்று விளக்கம் தேவை.

—ஆ மாரியப்பன், தெற்கு பொய்கை நல்லூர்.

உமக்குப் பால் கொடுத்து வளர்த்தவள் என்ன முறையாக இருக்கலாம் ?

வெண்பாப் போட்டி

இல்லற வாழ்வே இனிது.

புத்தனையும் காந்தியையும் புத்துலகில் சீர்தூக்கில்
புத்தனில் காந்தி புகழுடையோன் —எத்திறத்தும்
இல்லறத்தான் வள்ளுவன்பால் 'இல்லாதான்' தள்ளுவன்பால்
இல்லற வாழ்வே இனிது.

—வடிவிழந்தான், புதுச்சேரி.

"இல்லாளின் பேரன்பும் 'இச்'சொலியும் தேனொழுகச்
சொல்லாடும் செல்வன் சுடர்முகமும்—தொல்லோர்போல்
நல்கும் அறப்பண்பும் நாடுவையேல் வள்ளுவன்சொல்
இல்லற வாழ்வே இனிது."

—முத்துதாசன், பழநி.

புல்லரிசி பொங்கிப் பொடிஉப்பும் இல்லாமல்
அள்ளி ஒருவாய் அருந்திடினும்—சள்ளையில்லை !
உள்ளுறவு கொண்டாள் ஒருத்தியுடன் வாழ்கின்ற
இல்லற வாழ்வே இனிது.

—மரு. பரமகுரு, காரைக்குடி.

ஓடி விளையாடி ஊடிக் களைத்துப்பின்
கூடிக் களித்துக் குறைவின்றி—சேடியே
எல்லா மடைந்த எவனே பிதற்றினன்
இல்லற வாழ்வே இனிது.

—கு. பாலசுப்பிரமணியன், அநப்புக்கோட்டை.

நந்தம் மொழியினிது; நாறுபுகழ்ப் பண்பினிது;
முந்நீர் மகிழ்ந்தளிக்கும் முத்தினிது—முந்தைவழி
நல்லரசு காணல் நனியினிது; எல்லோர்க்கும்
இல்லற வாழ்வே இனிது.

—அ இரத்தினசாமி, கோவிலூர்.

வெல்லும் பகைமாய்த்து வேல்விழியாள் மென்தோளைப்
புல்லி மகிழ்ந்து புதல்வரின்—சொல்லென்னும்
நல்லமுத மாந்தி நமதுதாய்க் காளென்னும்
இல்லற வாழ்வே இனிது.

—க. வீரபத்திரன், கோவை.

கண்டிடலாம் கண்ணார; காதாரக் கேட்டிடலாம்;
உண்டிடலாம் வாயார; உள்ளார—அண்டிடலாம்;
செல்வமெலாம் கொண்டிடலாம்; செந்தமிழும் உள்ளதனல்
இல்லற வாழ்வே இனிது.

—அ. வே. காசிநாதன், மணவாசி.

வளநாடும், செம்மை வழியரசும், என்றும்
நலம்நாடும் நற்றுணையும், நாளும்—உலகுபுகழ்
பிள்ளைத் திருவும் பெறுங்காலை எல்லோர்க்கும்
இல்லற வாழ்வே இனிது.

—செல்லம், கோவை.

இனிதினிது மானிடராய் ஈண்டு பிறத்தல்
இனிது; நலமெல்லாம் எய்தல்—இனிது,பின்
எல்லா நலன்களும் எய்தக்கால் ஏலுமே
இல்லற வாழ்வே இனிது.

—கு. மதிமன்னன், மீனாட்சிபுரம்.

கொடியுங் கொழுந்துங் குலவமணம் வீசி
மிடியின்றி ஈட்டுபொன் மாண்பால்—பிடியென்றே
நல்லாரோ டெல்லார்க்கும் நாமீந் தருளாளும்
இல்லற வாழ்வே இனிது.

—சொர்ணநாதன், சல்லிப்பட்டி.

இல்வாழ்வு ஏற்றான்தான் இல்லாதான் ஆனாலும்
'இல்லாத' பாவிக்கே ஈந்திடுவான்—'இல்லாதான்'
இல்லறத்தான் கீழாவான்; இவ்வீழ்வு வாழ்விலையால்
இல்லற வாழ்வே இனிது.

—இரத்தினசனார்த்தனன், புதுவை.

நீரோடை யோரம் நிழல்மரமும் கன்றும்போல்
சீரோடு வாழ்ந்து செழித்துதவி —யாரோடும்
நல்லறமே பேசி நலமுடனே வாழ்கின்ற
இல்லற வாழ்வே இனிது !

—பே. சா. தனராசு, நாமக்கல்.

தடவியும் தொட்டும் தழுவிப் புரண்டும்
உடைதளர்ந்தும் பல்லாரோ(டு) ஊடும்—மடமானே!
செல்வச் சினிமாவைச் சீயென்றே தள்ளிவிடு
இல்லற வாழ்வே இனிது.

—மு. முத்துகிருஷ்ணன், சேயாறு.

அறவோர்க் களித்தும் அறவழி காத்தும்
உறவாரோ டுண்டும் உவந்தும்—நெறிசேர
உள்ளமொத்த காதலர்கள் ஒன்றிப் பயில்கின்ற
இல்லற வாழ்வே இனிது.

—வெ. வெள்ளைச்சாமி, பணவை.

சுடுகாடு போம்பிணமும் துட்டென்றால் எங்கே
கொடுவென்று வாய்திறந்து கூறும்—நெடும்புவியில்
நல்கூர்ந்தார் இல்வாழ்க்கை நஞ்சாம்; பொருள் படைத்தோர்
இல்லற வாழ்வே இனிது.

—கு. கார்த்திகாதேவி, கமுதி.

கல்வி படித்தென்ன ? காசு குவித்தென்ன ?
மல்கும் பெரும்பதவி வாய்த்தென்ன—நல்லவளைக்
கல்யாணம் செய்துகொண்டு கண்ணியமாய் நாம்வாழ
இல்லற வாழ்வே இனிது.

—இரா. சாமி, சித்தையன்கோட்டை.

பால்கலந்த நீர்போலும், பைந்தமிழ்ப்பண் போலுமுயிர்க்
கால்கலந்த மெய்போலும், காலமெலாம்—மால்கலந்து
நல்லறத்து டன்திகழ்ந்து, நாயகனு டன்கலந்த
இல்லற வாழ்வே இனிது.

நாஞ்சில் ஆ. ஆரிது, திருவத்திபுரம்.

"கலைவாழ்வே வாழ்வென்று கற்பை இழக்கும்
விலைவாழ்வா பெண்ணுக்கு வேண்டும்—நிலைவாழ்வாம்
நல்லற வள்ளுவன் நன்னூல் வழிப்பற்றும்
இல்லற வாழ்வே இனிது ?"

—சீராளன், சீர்காழி.

நெற்றியில் நீறணிந்து நீண்ட சடைதரித்துச்
சிற்றிடையர் மையலிலே சிக்கலிலும்—பெற்றியுடை
நல்லாள் மனையிருக்க நன்முறையில் வாழ்ந்திட
இல்லற வாழ்வே இனிது !

—புலவர் சு. ஐயப்பன் தனபதிராசன், நீராவிப்புதுப்பட்டி.

கல்வியென்றும் காணும் கலையென்றும் கன்னியுன்றன்
நல்லிளமை வீணாய் நலிவதுவோ ?—ஒல்லையிலே
நல்லறம் ஏற்பானை நாடி மணந்திடுவாய்;
இல்லற வாழ்வே இனிது.

—ப. ப. இராமசாமி, மால்மேடு.

இன்னல் வறுமையுடன் ஏமாற்றம் பொச்சாப்பும்
உன்னை உருக்குலைத்தே உன்வாழ்வைத்—தின்றுவிட
அல்லும் பகலும் ஆர்ப்பரிக்கும் என்றாலும்
இல்லற வாழ்வே இனிது !

—அமுதன், பூவை.

காவி உடையணிந்து காயமெலாம் நீறணிந்து
ஆவி குறைய அரகரா—கூவுவதேன்
நல்லறம் பூண்டவொரு நங்கையுடன் நாம் வாழும்
இல்லற வாழ்வே இனிது.

—சி மு. விசுவநாதன். சித்தேரி.

தென்றல் விளையாடத் தேன்மலர்கள் பூப்பதெல்லாம்
தென்னவர் வாழ்க்கை சிறந்திடவே !—இன்னுமவர்,
நல்லறஞ்சூழ் கற்புடை நல்லா ளுடுவாழும்
இல்லற வாழ்வே இனிது.

—அருள்மணி, ஈரோடு.

உற்ற மனையாளும் ஊறுசெயாப் பிள்ளைகளும்;
குற்றமறக் கொண்டணைத்த கோநிதியும்—கற்றோரின்
நல்லுறவும் நானிலத்தில் நாம்பெற்றால் நாண்விழியே !
இல்லற வாழ்வே இனிது.

—முத்தூரான், பொள்ளாச்சி.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன். ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-2. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.